Vol 15 - Issue 8- August 2022

FRIENDS MISSIONARY PRAYER BAND

for young friends of fmpb

A monthly Prayer Bulletin for Youth + Teens

fmpb youth wing

அடிப்படை மூல சத்தியம் 8

சுவிசேஷமும் ஊழியமும்



# சுவிசேஷமும் மிஷனெரிப் பணியும்

Private Circulation only

# சுவிசேஷமும் மிஷனெரிப் பணியும்

இயேசு கிறிஸ்துவின் இறுதி கட்டளை நீங்கள் புறப்பட்டுபோய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி, அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்."இதோ, உலகத்தின் முடிவுபரிந்தம் சகல நாட்களும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்ற வார்த்தைகள் முழு நேர மிஷனெரி பணியாளருக்கு கொடுக்கப்பட்டது கிடையாது. இது இயேசுவை இரட்ச கராக ஏற்றுக்கொண்ட இரட்சிப்பின் நிச்சயம் பெற்ற அனைவராலும் கீழ்ப்படிய வேண்டிய ஒன்று என்றால் மிகையாகாது. வேதத்தில் புதிய ஏற்பாட்டில் பவுல் ஒரு கூடாராம் செய்யும் வேலையை செய்து கொண்டு சுவிசேஷம் சொல்லி வந்தார். மேலும் அவரது மிஷனெரிப்பணிகள் அனைத்தையும் அவர் எழுதிய கடிதங்கள் வாயிலாக அறிய முடிகிறது. அவர் எழுதிய கடிதங்கள் ஏழு நகரங்களுக்கு ஒன்பது கடிதங்களையும், மற்றவை தனிநபருக்கும் எழுதப்பட்டது. இந்த சிறப்பு செய்தியில் சுவிசேஷம் சொல்லுதலையும், மிஷனெரிப்பணியையும் புதிய ஏற்பாட்டின் புத்தக அமைப்பை வைத்து விளக்க ஆசைப்படுகிறோம்.

புதிய ஏற்பாடு மூன்று பெரும் பகுதிகளாக பிரிக்க முடியும். முதல் பகுதி சுவிசேஷ காலம் (மத்தேயு முதல் யோவான் வரை), இரண்டாவது பகுதி சபையின் காலம் (அப்போஸ்தலர் முதல் 13 அதிகாரங்கள் மற்றும் இயேசுவின் சீடர்கள் எழுதிய புத்தகங்கள் அடங்கும்) கடைசிப்பகுதி மிஷனெரி காலம். இது அப்போஸ்தலர் நடபடிகள் 16 ஆம் அதிகாரம் முதல் மற்றும் பவுலின் கடிதங்கள் உள்ளடக்கிய பகுதியாகும்.

இந்த செய்தியின் முதல் பகுதி சுவிசேஷம் சொல்லுதல். இதை பவுலின் முதல் மிஷனெரி பயண திட்டத்தின் மூலம் கற்றுக்கொள்வோம். அப் 13 அதிகாரத்தின் கடைசிப்பகுதி 46ஆம் வசனத்தில் இதோ நாங்கள் புறஜாதி களிடத்தில் போகிறோம் என்று சொல்லி கிளம்பிய பவுல், பர்னபா அதைத் தொடர்ந்த 14ஆம் அதிகாரத்தில் யூதர்களின் ஜெப ஆலயத்தில் பிரசங்கிக்கிறதை பார்க்கிறோம். மேலும் 6ம் வசனத்தின் கடைசிபகுதி மற்றும் 7ஆம் வசனத்தை வாசித்தால் ஓடிப்போய் அங்கே சுவிசேஷத்தை பிரசங்கம் பண்ணினார்கள் என்று படிக்க முடிகிறது. இப்படியாக பவுலின் ஊழிய பயணத்தில் எங்கும் நாம் அறிய வேண்டியது தொய்வில்லாமல் பாடுகள், எதிர்ப்புகள், கஷ்டங்கள், அவமானங்கள் மற்றும் ஏளனங்கள் மத்தியில் தொடர்ந்து சுவிசேஷம் சொன்னதை பார்க்க முடிகிறது. சுவிசேஷத்தை பவுல் தைரியமாய் பிரசங்கிக்க இரண்டு அசைக்க முடியாத காரணங்கள் ஒன்று இரட்சிப்பின் அனுபவத்தை (அப் 9) இயேசு கிறிஸ்துவின் ஒளியில் நேரடியாக அவரின் சத்தத்தை கேட்டு இரட்சிப்பின் நிச்சயத்தை பெற்றுக்கொண்டது என்றே எடுத்துக்கொள்ளலாம். இரண்டாவது அந்த அனுபவத்தை பெற்ற பின்பு வேதத்தை சரியாக ஆராய்ந்து ஆகமங்கள் மற்றும் தீர்க்கதரிசனங்களில் சொல்லப்பட்ட கிறிஸ்துவை இயேசுவின் வாழ்க்கையோடு ஒப்பிட்டு, இவரே மெய்யான தெய்வம், இரட்சகர் இயேசுவே கிறிஸ்து என்ற நிச்சயத்தை பெற்றவனாக ஊழியத்தை ஆரம்பித்ததுதான். அடுத்தப்பகுதிக்கு செல்லும் முன்பு ஒன்றை மறவாதிருக்க வேண்டும். சுவிசேஷம் சொல்ல இயேசுகிறிஸ்துவோடு நேரடி சந்திப்பு அவசியம் மற்றும் இந்த இயேசு கிறிஸ்து மட்டுமே முழுமுதல் ஒன்றான மெய்யான தெய்வம் என்பதை வேதத்திலிருந்து கற்று தைரியமாய் சொல்ல வேண்டும். செய்தியின் இரண்டாம் பகுதிக்கு செல்லலாம். அதாவது சுவிசேஷம் சொல்லுதல் மற்றும் மிஷனெரிப்பணி என்பது இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, பாடு மரண உயிர்த்தெழுதல் இவைகளை சொல்லி இயேசுவை ஒரு வல்லமையான தெய்வ மாக காட்டி, இரட்சிப்பில் நடத்தி ஞானஸ்நானம் கொடுத்து, சபையில் சேர்த்துவிட்டால் நமது பணி முடிந்து விட்டது என்று எண்ணுகிறோம். இந்த நிலை மிஷனெரிப் பணியில் முதல்பகுதி மட்டுமே, அப்படியானால் மிஷனெரிப்பணி எங்கு முடிவடைகிறது என்பதை பவுலின் புத்தக அமைப்பை வைத்து கற்றுக்கொள்வோம். இதை புரியும்படி சொல்லுகிறோம். பவுல் எழுதிய கடிதங்கள் அவர் எழுதிய வரிசையில் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றால் 1,2 தெசலோனிக்கேயர் புத்தகம் முதலாவதாவும், ரோமர் புத்தகம் 6வதாகவும் இடம் பெற்றிருக்க வேண்டும். ஆனால் ஆவியானவர் அதை வரிசை கிரம மாக வைக்கும் போது, முதலாவது ரோமர் புத்தகத்தை வைத்து தொடர்ந்து 1 மற்றும் 2 கொரிந்தியர் புத்தகங்களை வைத்ததை பார்க்கலாம். இந்த ரோமர் புத்தகம் பவுல் எழுதிய சுவிசேஷம் என்று சொல்லுவர். அதாவது இரட்சிப்பின் முதல்படி இதில் ஆரம்ப மாகிறது. ரோமரில் கிறிஸ்துவில் நாம் நீதிமானாக்கப்படுகிறோம். அதை தொடர்ந்து 1 கொரிந்தியரில் கொள்கை குழப்பங்கள் மற்றும் பாவ பழக்கவழக்கங்கள் இவைகளிலிருந்து விடுபட்டு கிறிஸ்துவில் வளர ஆலோசனைகள் வைக்கப்பட்டுள்ளது, 2 கொரிந்தியரில் கிறிஸ்துவில் ஆறுதலை அடைய வழி சொல்லுவதை பார்க்கலாம். மேலும் கலாத்தியரில் கிறிஸ்துவுக்குள் நம்முடைய சுதந்திரத்தையும், எபேசியரில் கிறிஸ்துவுக்குள் நம்முடைய ஐக்கியத்தையும், பிலிப்பியரில் கிறிஸ்துவில் நம்முடைய சந்தோஷத்தையும், கொலோசெயரில் கிறிஸ்துவில் நம்முடைய நிறைவையும் காண முடிகிறது. இப்படி படிப்படியாக வளர்ந்து 1 மற்றும் 2 தெசலோனிக்கேயர் புத்தகங்களில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை தெளிவுப்படுத்தி சபையை கற்புள்ள கன்னிகையாக, ஒரே மணவாளனுக்கு கையளிப்பதை பார்க்கலாம். இதுவே மிஷனெரிப்பணியின் துவக்கமும் வளர்ச்சியுமாகும். 1,2 தீமோத்தேயு மற்றும் தீத்துபுத்தகங்கள் சபைக்கான கட்டளை, ஒழுங்கு முறைகள், ஆராதனை முறைகள், ஊழியரின் நிலைகள், ஊழியரின் தகுதிகள் இவைகளை கூறுகிறது.

இப்பொழுது செய்தியின் கடைசி பகுதிக்கு வருவோம். சுவிசேஷம் சொல்லுதல் என்பது அனைவரின் கடமை. அதை தொடர்ந்து மிஷனெரி பணி என்பது சபைகள் தன்னிறைவு வரும் வரை அவர்களை வளர்த்து, மணவாட்டியாக தன்னை ஆயத்தப்படுத்துவது என்பதை நாம் வேதத்தின் அடிப்படையில் புரிந்து கொள்ள முடிகிறது. இந்த பணியை கடைசி இந்தியன் கல்வாரி அன்பினை பெறும் வரை தொடர்ந்து நிறைவேற்றுவோம். உண்மையிலேயே பரலோகத்தை இந்தியர்கள் நிரப்புவார்கள் ஆமென்.



Bro. Selva

## கேரீத்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும் வாலிப ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்.

## Vision

*To reach the spheres of India and to imbibe the heavenly manna to our youth, who are the future pillars of 'our Nation'.*

எல்லைகள் கடந்து நம் எதிர் கால இந்தியத் தூண்களாகிய இளைஞர்கள் உள்ளத்தில் பரம மன்னாவை விதைக்க.
சிந்தனைக் கூர் கொண்டு இந்தியம் மீட்டிடும் இலக்கியச் சேவையால் இளைஞனைத் தேற்ற ஓர் இறை படைப்பு.

## Objective

*A monthly magazine to strengthen the Prayer Cells...*

ஜெபக்குழுவை வலுப்படுத்தும் மாத இதழ்

## Produced, Layout & Design by

*fmpb youth & teens wing*

www.fmpbyouth.org
Kerithmagazine@gmail.com


Youth & Teens Wing
29,High School Road
Ambattur,Chennai-53
Ph :044-26570404 Extn 266
fmpb youth wing


தனிப்பிரதி ரூ.25/-
ஆண்டு சந்தா ரூ.250/-

சந்தா மற்றும் முகவரி மாற்றத்திற்கு கூப்பிடுங்க
Cell : 9445040148
PH : 044 26570404

### ஜெபக்குழு தலைவர்களுக்கு...

ஜெபக்குழுவில் நீங்கள் அமர்ந்து தியானிப்பதற்காகவும் ஜெபிப்பதற்காகவும் கேரீத் இதழின் செய்திகளும் ஜெபக்குறிப்புகளும் நான்கு வாரங்களாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. நான்கு வார ஜெபக்குறிப்புகளையும் நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம்.
ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றைத் தனியாக எடுத்து ஜெபநேரத்தில் பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனைய பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவுக்கு வரும் வாலிபர்களுக்குக் கொடுத்துபடிக்கச்சொல்லலாம்.
ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களைமாதம் ஒருமுறை சந்திப்போம். பயன்படுத்துங்கள்...
ஜெபக்குழுவை வலுப்படுத்துங்கள்...

தொடர் ஜெபத்திற்கு அறைகூவல் பயன்படுத்தவும்

---

கிறிஸ்துவுக்குள் மிகப்பிரியமுள்ள கேரீத் நண்பர்களுக்கு, அன்பின் வாழ்த்துக்கள்!

சுவிசேஷம் என்ற வார்த்தை "Gospel" என்ற பழங்கால ஆங்கில வார்த்தையிலிருந்து வந்திருக்கிறது. அதினுடைய அர்த்தம் நல்லசெய்தி, சந்தோஷ செய்தி என்பதாகும். எவாஞ்ஜிலியோன்(Evangelion) என்ற கிரேக்க வார்த்தைக்கு "நல்ல செய்தி" என்ற பொருள் கூறப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் ராஜ்ஜியத்தை பற்றியும், இயேசு கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைப்பவர்களுக்கு அவர் மூலமாக கிடைக்கும் மீட்பு மற்றும் பாவ வாழ்வில் இருந்து கிடைக்கும் விடுதலையை அனுபவிப்பதுமே நல்ல செய்தியாகும். இது எத்தனை மகிழ்ச்சியானதாகும்.

1732-ஆம் ஆண்டில் ஜெர்மனி தேசத்தை சார்ந்த ஷின்சென்டார்ப்(Zinzendorf) என்பவர் ஆப்பிரிக்க நாட்டில் உள்ள தீவுகளில் வாழ்ந்த அடிமைகளின் அவல நிலைமையை அறிந்து கொண்டார். இவர்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்க அழைப்பு கொடுத்தார். லியோன் ஹாட் டோபர் மற்றும் டேவிட் நிட்ச்மேன் என்ற வாலிபர்கள் சுவிசேஷம் அறிவிப்பதற்காக தங்களை அடிமை யாக்கி கொண்டு மேற்கிந்திய தீவுகளுக்கு செல்ல அர்ப்பணித்தனர். அவர்கள் கப்பல் துறைமுகத்திலிருந்து புறப்படும் போது, கப்பலில் நின்று கொண்டு தங்கள் அன்பானவர்களின் முகங்களை கடைசியாக பார்க்கும் போது, "அடிக்கப்பட்ட ஆட்டுக் குட்டி தனது துன்பத்தின் வெகுமதியை பெறட்டும்" என்று சொன்னார்கள்.

சுவிசேஷம் அழகு மனிதர்களை உருவாக்குகிறது. நம்முடைய பணித்தளங்களில் நமது மிஷனெரிகள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிப்பதினால், பல மக்கள் கூட்டத்தை சேர்ந்தவர்கள் இலட்சக்கணக்கில் கிறிஸ்துவை தங்கள் இதய நாயகனாய் ஆராதித்து வருகிறார்கள். ஆனாலும் நம் தேசத்தில் சுவிசேஷம் எட்டாத பல இலட்ச கிராமங்கள் உண்டு. 76வது சுதந்திர தினத்தை கொண்டாடுகிற நாம் பலவிதமான அடிமைத்தனத்தில் இருக்கின்ற நம் தேசத்தில் சுவிசேஷம் அறிவிப்பதற்காக ஒரு சேனையாக(Army) இருப்பதற்கு பதிலாக வெறும் நேயர்களாய்(Audience) இருக்கிறோம். நற்செய்தி பணியில் நேரடியாக ஈடுபாடாமல் முடங்கி போய் உள்ளோம். எனக்கும் விடுதலை வாழ்வு கிடைக்காதா? என ஏக்கத்தோடு நம் முகத்தை நோக்கும் நம் தேசத்தின் ஜனங்களின் விடுதலைக்காக சுவிசேஷத்தை அறிவிக்க அர்ப்பணிப்போம். இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மூலமாக மட்டுமே உலகை தேவன் ஆசீர்வதிக்க முடியும். 1 கொரி 9:16 "சுவிசேஷத்தை நான் பிரசங்கித்துவந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ" சுவிசேஷம் அறிவிப்பதில் உன் பங்கு என்ன? சிந்திப்போம். தொடந்து ஜெபத்துடன் வாசித்து நமது ஜெபக்குழுக்களில் தவறாமல் பயன்படுத்தும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நமது கேரீத் இதழை உங்கள் நண்பர்களுக்கும் இதை அறிமுகப்படுத்துங்கள். இதுவரை சந்தாதாரராகவில்லை என்றால் ஆண்டு சந்தாவாக ரூ. 250/-ஐ செலுத்தி பங்குதாரர்களாக அன்புடன் அழைக்கிறோம்.

கடந்த 5 ஆண்டுகளாக இயக்கத்தின் இளைஞர் பிரிவு, இளம் வாலிபர் பிரிவு மற்றும் கேரீத் மாத இதழின் பணிகளை நிறைவேற்றின சகோ. செல்வின் மற்றும் சகோதரி. மெர்சி அவர்களுக்கு நன்றி கூறுகிறோம். தொடர்ந்து அவர்களின் ஊழிய பொறுப்புகளை தேவன் தாமே ஆசீர்வதிக்க நம்முடைய ஜெபங்களில் நினைவு கூருவோம். எங்களுக்காகவும் வாலிபர் பிரிவின் ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள். தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

கிறிஸ்துவின் உன்னத பணியில்,
**J.** டேனியேல் அருள்மணி

என் பெயர் ரமேஷ் வேல்ராஜ். நான் திருநெல்வேலி மாவட்டம் ஆலங்குளத்தில் ஒரு இந்து குடும்பத்தில் பிறந்தேன். இந்து பாரம்பரியத்தில் வளர்ந்தேன். வாலிப வயதில் கெட்ட நண்பர்களின் வழிநடத்துதலினால் தவறான பழக்க வழக்கத்தில் ஈடுபட்டு, கடன் வாங்கி சமாதானம் இல்லாமல் வாழ்ந்து வந்தேன் .

**என்னை தேடி இயேசு வந்தார்:**

சமாதானம் இல்லாமல் வாழ்ந்து வந்த நிலையில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் பொன்ராஜ் அண்ணன் அவர்கள் இயேசு கிறிஸ்து பற்றி சொல்லி வந்தார்கள். ஆனால் கேட்க மனதில்லாமல் இருந்த நான் மரியாதை நிமித்தம் அவருக்கு செவிகொடுத்து வந்தேன். இப்படியாக சமாதானம் இல்லாமல் வாழ்ந்து வந்த சூழ்நிலையில் கடன் தொல்லை அதிகரித்தது. 1999-ஆம் வருடம் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டதால் சமாதானத்தை பெற்றுக்கொண்டேன். 1999-ஆம் வருடம் அக்டோபர் மாதம் ஜெபக்குழுவில் இணைந்து எவ்வளவோ ஜெபித்து வந்தாலும், என்னுடைய பாவ பழக்கவழக்கங்களில் இருந்து மீள்வதும், அதிக கடன் பிரச்சனைகள் நீங்குவதும் பாரமாக இருந்தது. வேதத்தை வாசித்து ஜெபிக்க ஆரம்பித்தேன். என்னுடைய பாவ பழக்க வழக்கத்திலிருந்து எனக்கு விடுதலை தாரும் ஆண்டவரே என்று மன்றாடினேன். என்னுடைய தேடுதலினால் தேவன் எனக்கு பாவத்திலிருந்து முழுமையாக விடுதலை கிடைக்க கிருபை செய்தார்.

**ஊழியத்திற்கு அழைப்பு:**

15.8.2000-இல் பாளையங்கோட்டை கதீட்ரல் ஆலயத்தில் மிஷனெரி பிரதிஷ்டை வைபவம் நடந்தது, அனேக மிஷனெரிகள் பிரதிஷ்டை பண்ணப்பட்டார்கள். கடைசி நேரத்தில் அழகாய் நிற்கும் யார் இவர்கள் என்ற பாடல் பாடப்பட்டது, அப்பொழுது வெளியே நின்று கொண்டிருந்த நான், மிஷனெரிகளை குறித்து பாடிய பாடல் நிமித்தம் என் கண்களில் இருந்து கண்ணீர் வடிய ஆரம்பித்தது. தேவன் அவருடைய ஊழியத்திற்கு என்னை அழைத்தார். தேவனுடைய அழைப்பை ஏற்றுக் கொண்ட நான், என்னை முழுவதுமாக அவர் பணிக்கு அவர் கரங்களில் ஒப்புவித்தேன். பாடுகிறவர்கள் வரிசையில் அல்ல யாரைக் குறித்து பாடுகிறார்களோ அந்த வரிசையில் நான் நிற்க வேண்டும் என்று சொல்லி ஆலய வாசலில் நின்று கண்ணீரோடு ஜெபித்தேன். எப்படியாவது மிஷனெரியாக வட மாநிலத்திற்கு சென்று ஆத்து மாக்களை ஆதாயப்படுத்த வேண்டும் என்று சொல்லி எனக்குள்ளாக வைராக்கியம் கொண்டு அதற்காக ஜெபிக்க ஆரம்பித்தேன். ஊழியத்திற்கு செல்ல வேண்டும் என்று தீர்மானித்து ஜெபித்து வந்த பொழுது, நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் இருக்கும் வசந்தி அக்கா அவர்கள் என்னிடம் தேவனுக்காக முதல் அடி நீ எடுத்து வைக்கும் போது, தேவன் உன்னுடைய எல்லா காரியங்களையும் வாய்க்க செய்வார், ஊழியத்திற்கு என்று திறந்த வாசலை கட்டளையிடுவார் என்று சொல்லி என்னை ஊழியத்துக்கு செல்வதற்காக உற்சாகப்படுத்தினார்கள்.

கிறிஸ்தவ பெண்ணை மணம் முடிக்க வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தை அறிந்து எந்த விதத்திலும் ஊழியத்திற்கு சென்று விடக்கூடாது என்ற நோக்கத்தில், என் பெற்றோர்கள் கத்தோலிக்க திருச்சபையில் ஒரு பெண்ணை பார்த்து வந்தார்கள். ஆனால் தேவனுடைய அனாதி தீர்மானத்தின் படி, ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தில் சிட்லிங் பகுதியில் மிஷனெரி ஆக பணிபுரிந்த திரு ஜேக்கப் அய்யாதுரை- சாந்தி அவர்களின் மூன்றாவது மகள் பிரிசில்லா ஒடிசாவில் Feed Odisa Project-ல் திருமதி லில்லியன் ஸ்டான்லி அவர்களுடன் ஊழியத்தில் ஈடுபட்டு வந்தவர். இவரை திருமணம் முடித்து, 2005 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தேவ கிருபையினாலே நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் முழுநேர ஊழியர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டோம். 2005 ஆம் ஆண்டு ஜூன் மாதம் சேலம் வேதாகம கல்லூரியில் முதலாம் ஆண்டு பயிற்சி முடித்தோம்.

**பணித்தளத்தில் தேவனுடைய வல்லமை:**

2006-ஆம் ஆண்டு ஜார்கண்ட் மாநிலத்திற்கு சந்தால் மக்கள் மத்தியில் ஊழியத்திற்காக கடந்து சென்றோம். சந்தால் மொழியை கற்பதற்காக முதல் ஐந்து மாதங்கள் சிக்காரிபாடா பணித்தளத்தில் ஊழியர்களாக பணிபுரிந்தோம். 2006-ம் ஆண்டுஅக்டோபர் மாதம் பத்தாபாடி என்ற ஒரு பணித்தளத்தில் பணி செய்ய ஆரம்பித்தோம். 2006-ம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை 7500 க்கும் மேற்பட்ட புதிய ஆத்துமாக்களை கிறிஸ்துவின் மந்தையில் சேர்க்கவும், 48 ஆராதனை குழுக்களை உருவாக்கவும், 24 ஆலயங்களை கட்டவும் தேவன் கிருபை செய்தார். தற்சமயம் ஜார்கண்ட் பெல்டிஹா பணித்தளத்தில் தேவ பணியை செய்து வருகிறோம்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாத என்னுடைய குடும்பத்திற்காகவும், எங்களுடைய இரண்டு பிள்ளைகளுக்காகவும் ஜெபியுங்கள். மூத்த மகன் அனுக்கிரஹன் ஜுபால் பன்னிரண்டாம் வகுப்பும், ஜபஸ் ஷைன் 9-ம் வகுப்பும், படித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் படிப்பிற்காக அதிகமாய் ஜெபியுங்கள்.

என் பெற்றோரின் அர்ப்பணிப்போ அல்லது அவர்களது ஆலோசனையோ கிடைத்திராத என்னையே தேவன் அழைத்து ஊழியத்தில் பயன்படுத்துவரானால், சிறுவயதிலிருந்தே ஆலயம், ஞாயிறுபள்ளி, வாலிபர் கூடுகை என்று பல கூடுகைகளில் கலந்து கொண்டு தேவனுடைய சத்தத்தை கேட்டு வளர்ந்து வரும் வாலிபர்களே! நீங்களும் உங்களை இம்மாபெரும் பணிக்கு அர்ப்பணித்து வருவீர்களென்றால் தேவன் உங்களையும் அவருடைய கரத்தில் எடுத்து பயன்படுத்துவார். சுவிசேஷத்திற்காக காத்திருக்கும் ஏராளமான கிராமங்கள் எங்கள் சந்தால் மக்கள் மத்தியில் உண்டு. இன்றைக்கே உங்களை சுவிசேஷத்திற்காக அர்ப்பணியுங்கள். உங்கள் மூலம் பாரதத்தின் ஒரு மக்கள் கூட்டம் பரமன் இயேசுவை அறிய அர்ப்பணிப்பீர்களா?



- Mr. Ramesh, Jharkand

# அழைப்பின் குரல் கேட்டேன்

நம் பணத்தை திறம்பட நிர்வாகிக்க வேண்டுமென்றால் தேவைகள் மற்றும் விருப்பங்களின் வித்தியாசத்தை தெரிந்திருக்க வேண்டும். தேவைகள் என்பது நாம் அன்றாடம் வாழ அவசியமானவைகள். உதாரணமாக நமக்கு உணவு தினம் தேவை அதன்மூலம் தான் நமக்கு அன்றாட பணிகளுக்கான சக்தி கிடைக்கிறது. விருப்பம் என்பது நம் வாழ்க்கை தரத்தை உயர்த்தக் கூடிய ஒன்றாகும். ஆனால் இவை அத்தியாவசியமானவைகள் கிடையாது. நம் விருப்பம் நிறைவேறாவிட்டால் ஒரு ஏமாற்றம் உண்டாகுமே தவிர அதனால் பெரிய பாதிப்பு எதுவும் கிடையாது. உதாரணமாக நமக்கு உணவு அவசியம் என்றும் அது ஒரு தேவை என்றும் பார்த்தோம். ஆனால் அனுதினமும் அறுசுவை அசைவ உணவு எதிர்ப்பார்ப்பது நம் விருப்பமாக இருக்கலாம்.

இதன்படி பார்க்கும்போது உணவு உடை வீடு மருந்துகள் போன்றவை நம் தேவைகள் என்று உணர்கிறோம். மற்றவை யாவும் விருப்பமாகவே அமைகிறது. தேவைகளும் விருப்பங்களும் எல்லாருக்கும் ஒன்றாக எப்பொழுதும் பொருந்துவது கிடையாது. உதாரணமாக ஒரு தகவல் தொழில்நுட்ப ஊழியருக்கு மடிக்கணிணி ஒரு தேவை. ஆனால் பள்ளி படிக்கும் மாணவனுக்கோ அது ஒரு விருப்பம். தேவைகளையும் விருப்பங்களையும் பகுத்தறிய ஒரு நல்ல வழி காத்திருப்பது தான். தேவைகள் காலத்தால் குறையாது. ஆனால் விருப்பமோ காலப்போக்கில் மாறிவிடும்.

நம் தேவை எது நம் விருப்பம் எது என்று அறிந்து கொண்டால் தான் ஞானத்தோடு நிதி மேலாண்மை செய்ய முடியும் பல நேரங்களில் தேவைகளையும் விருப்பங்களையும் பகுத்தறிய தவறுகிறதாலேயே தேவையற்ற பல பொருட்களையும் வேண்டாத செலவுகளையும் மேற்கொள்கிறோம்.

வேதத்தின்படி கடன் வாங்குவது ஊக்குவிக்க படுவதில்லையென்றாலும் உலகத்தின்படி கடன்களை சரியான கடன் (Good Debt) மற்றும் தவறான கடன் (Bad Debt) என்று பிரிக்கலாம்.

## GOOD DEBT vs BAD DEBT

இந்த கடனைக்கொண்டு வாங்கும் பொருட்களின் மதிப்பு காலத்தோடு ஏறிக்கொண்டேயிருக்கும் சில உதாரணங்களை பார்ப்போம்.

**கல்விக் கடன்:**
பொதுவாக அதிகமான கல்வியால் அதிகமான சம்பாத்தியம் பெறமுடியும். ஆகவே கல்விக் கடன் ஒரு சரியான கடன் என்று கருதப்படுகிறது.

**வியாபாரக் கடன்:**
தொழில் துவங்கவோ அல்லது வேறு வியாபாரத் தேவைக்கோ வாங்கும் கடனும் கூட தொழிலின் வெற்றியால் நல்ல முதலீடாக மாறும்.

**வீட்டுக் கடன்:**
வீடு வாங்க / கட்ட பயன்படும் கடன் ஒரு நல்ல மதிப்புடைய வீட்டை தருவதால் சரியான கடன் என்று கருதப்படுகிறது.



இதனால் வாங்கும் பொருட்களின் மதிப்பு காலத்தோடு குறைந்துக் கொண்டேயிருக்கும்.

**வாகனக் கடன்:**
வாகனத்தின் விலை வாங்கின நாள் முதல் குறைந்து கொண்டே வருவதால் இது தவறான கடன் ஆகும்.

**தனி நபர் கடன்:**
சுற்றுல்லாவிற்கோ திருமணத்திற்கோ அல்லது சுகவீனத்திற்கோ கடன் பெறும் போது அது ஒரு தவறான கடன் என்பது நிபுணர் கருத்து.

**க்ரெடிட் கார்டுகடன்:**
அன்றாட தேவைகள் உணவு மற்றும் உடைகளை க்ரெடிட் கார்டுகள் மூலம் வாங்குவது தவறாகும்.

க்ரெடிட் கார்டு (Credit Card) பயன்பாட்டு சோதனை





- இந்தப் பொருள் எனக்கு உண்மையாகவே தேவையா?
- என்னால் எல்லா மாதமும் கட்டணம் செலுத்த முடியுமா?
- சில காலம் நான் வேலைக்கு செல்லவில்லை என்றால் என்னால் தொடர்ந்து கட்ட முடியுமா?– என்னுடைய எதிர்கால சம்பாத்தியத்தை இவ்வாறு கட்டி வைப்பது சரியா?
- நான் முழு தவணைகளும் கட்டி முடித்தவுடன் நான் வாங்கின பொருளை பயன்படுத்த முடியுமா?

Credit கார்டுகளின் அதி உயர்ந்த வட்டி விகித்ததைக் கருத்தில் கொண்டு அதனை விட்டு வெளியேறுவது நலமாகும்.

இயேசு நமக்காக மரித்த போது நாம் கட்டி முடிக்கக் கூடாத எல்லா கடன்களையும் தள்ளுபடி செய்து வெற்றி சிறந்தார். நாம் எல்லாவற்றிலும் சுதந்திரத்தோடு வாழ வழிவகுத்தார்.

ஆகவே மத்தேயு 6:31-33ல் ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.

- Mr. Vinoth Kumar

# இயேசுவின் இறுதிக் கட்டளையும், உலகளாவிய சுவிசேஷப்பணியும்

Rev. E. Rajan

இறுதிக்கட்டளை என்பது: இயேசு தம் சீஷர்களின் மூலமாக திருச்சபைக்குக் கொடுக்கப்பட்ட ஊழியம். அதாவது சுவிசேஷத்தை உலகமெங்கும் பறைசாற்றுவது. மக்கள் இயேசுவின் மீது நம்பிக்கை வைத்து விசுவாசத்துடன் அவரை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு வாழ்நாள் முழுவதும் அவரைப் பின்பற்றுகிறவர்களாக மாற்றுவது.

இறுதிக் கட்டளையின் செயல்பாடு: மத்தேயு 28:18, மாற்கு 16:15 லூக்கா 24:44-49, யோவான் 20:21, அப்போஸ்தல நடபடிகள் 1:8. இந்த ஐந்து பகுதிகளும் இயேசுவின் இறுதி கட்டளைகளின் செயல் நோக்கத்தை வெளிப்படுத்தும் முக்கிய பகுதிகளாகும். இந்த வசனங்கள், நான்கு சுவிசேஷ பகுதிகளையும் மற்றும் புதிய ஏற்பாட்டின் பகுதிகளையும் இணைக்கும் ஆதாரமாகும். இந்த வசனங்கள் கிறிஸ்து“போங்கள்”என்று திருச்சபைக்கு கட்டளையிடுவதாக இருக்கிறது. இந்த வார்த்தைகள் வெற்றியான ஊழியத்திற்கு தேவைப்படும் அடிப்படை சத்தியங்களாகும். ஆதி திருச்சபையின் நாட்கள் துவங்கி, இன்றும் வருங்காலங்களிலும், இந்த ஐந்து இறுதிக் கட்டளையின் வாக்கியங்கள் திருச்சபையின் பிரதான ஊழியமாகிய நற்செய்திப் பணியின் அடிப்படையாக இருக்கிறது.

### 1. விடைபெறும் (வழியனுப்பும்)இறுதி வார்த்தைகள்- வற்புறுத்தும் செய்திகள்:

நேசிக்கப்பட்ட ஒருவரின் கடைசி வார்த்தைகள் எப்பொழுதும் முக்கியமானதாக கருதப்படுகிறது.இயேசுவின் இறுதிக் கட்டளை, சீஷர்கள் உலகமெங்கும் சென்று சுவிசேஷ ஊழியத்தை ஆரம்பிக்க ஊக்கம் தரும் வார்த்தைகளாக இருந்தது. இதை முதலாவது இயேசு தான் உயிர்த்தெழுந்த நாளின் மாலைப்பொழுதில் சீஷர்களிடம் கூறினார். பின் தாம், உயிர்த்தெழுந்த 40 நாட்களுக்குப்பிறகு சீஷர்களுக்கு கட்டளையாகக் கொடுத்து ஊழியத்தை ஆரம்பிக்கும்படி கட்டளையிட்டார். அதாவது இயேசு வெற்றி வேந்தராய் பரலோகத்திற்கு ஏறிப்போவதற்கு முன் கூறின வார்த்தைகள். இயேசு கிறிஸ்துவின் இறுதிக் கட்டளை அவருடைய சீஷர்களின் முக்கிய நோக்கமாக மாறி அவர்களை செயல்படவைத்தது. நீங்கள் இயேசுவின் இறுதிக் கட்டளையை வாழ்வின் பிரதான பணியாக ஏற்று அதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறீர்களா?

### 2. ஊழியத்தின் மாதிரி மற்றும் செயல் முறைகள்:

இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி,“உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக, பிதா என்னை அனுப்பினது போல நானும் உங்களை அனுப்புகிறேன்” (யோவான் 20:21). எப்பொழுதெல்லாம் ஆண்டவர்; ஒரு காரியத்தை செய்ய விரும்பும்போது, அதை செய்யும் படி யாராவது ஒருவரை அனுப்புவார். இந்த செயல்பாட்டின் ஒரு பாகமானது, உலகமனைத்திலுமுள்ள மக்கள் பாவத்திலிருந்து மீட்படைய, அனைவரும் இந்த நற்செய்திகளை அறிந்துகொள்ளும்படி இயேசு தனது கடைசிக் கட்டளையை சீஷர்களுக்கு கொடுத்து அனுப்பினார். அவரது சீடர்கள் எப்பொழுதும் ஆண்டவர் தந்த இந்த ஊழியத்தை நிறைவேற்ற முக்கியத்துவம் கொடுப்பவர்களாயிருந்தனர். இன்றும் ஜீவிக்கிற நம் ஆண்டவர் தேவனால் அனுப்பபட்ட ஒரு மிஷனெரி. நம் தேவன் ஒரு மிஷனெரி பணியின் காரணகர்த்தா. மிஷனெரி ஊழியத்தில் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய நான்கு முக்கிய காரியங்கள் உண்டு. அவைகள்:

- மிஷனெரி பணியின் காரணகர்த்தாவும், அனுப்புகிறவரும்
- அறிவிக்கப்பட வேண்டிய நற்செய்தி
- செல்லவேண்டிய இடம்
- நிறைவேற்ற வேண்டிய பணி.

இயேசு உயிர்த்தெழுந்த பின் செய்வதறியாதிருந்த தம் சீஷர்களை சந்தித்து பிதா தன்னை மிஷனெரியாக அனுப்பியது போல நான் உங்களை அனுப்புகிறேன் என்ற கட்டளை கொடுத்து அவர்களை ஊழியத்திற்கு அனுப்பினார். (யோவான் 20:21) பழைய ஏற்பாட்டில், இஸ்ரவேலர் தங்களின் வாழ்க்கை அனுபவத்தில் பிதாவாகிய தேவனோடு ஏற்பட்ட உடன்பாட்டின் மூலம் காந்தம் போன்று மக்களை ஈர்த்து, தேவனின் ஒளியை வெளிப்படுத்தினார்கள். இயேசு தம் சீஷர்களிடம் நீங்கள் உலகத்திற்கு உப்பாக மற்றும் ஒளியாக இருக்கிறீர்கள். உங்கள் வாழ்வின் சாட்சிகளின் மூலம் இருளிலிருக்கும் மக்களை வெளிச்சத்திற்குள் கொண்டுவாருங்கள் என்று சொல்லி ஊக்கப்படுத்தினார்.

### 3. மகா மேன்மையான பெரிய ஊழியம்:

நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் (மாற்கு 16:15)

எட்டு நாட்களுக்குப்பிறகு இயேசு தம் சீஷர்களிடம் மிகப்பெரிய இந்த ஊழியத்தின் இலக்கையும் அவைகளின் முக்கியத்துவத்தையும் குறித்தவைகளை அவர்களுக்கு தெளிவாக போதித்தார். “சர்வ” என்பதில் முழுபூலோகம், உலகத்தின் ஒவ்வொரு பாகமும், அதில் வாழும் ஒவ்வொரு மனிதனையும் உள்ளடக்கியதாகும். இயேசுவின் முக்கிய நோக்கம், பிரதான சித்தம் இந்த உலகம் சுவிசேஷத்தால் நிரப்பப்பட்டு அனைவரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதாகும். சுவிசேஷம் அறிவிப்பதே திருச்சபையின் முக்கிய ஊழியமாகும். திருச்சபையின் மற்ற எந்த ஒரு செயல்பாடும் இந்த இறுதியான நோக்கத்திற்கு அடுத்ததாகஅல்லது கீழானதாகத்தான்

இருக்கவேண்டும். ஆனால் இன்று திருச்சபை 90 விழுக்காடு வளத்தை தனக்காகவே செலவழித்து கர்த்தரின் இறுதிக் கட்டளையை மறந்து செயல்படுகிறது.

## 4. ஊழியத்தின்செயல் முறை:

மத்தேயு28:18-20 அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து அவர்களை நோக்கி, வானத்திலும் பூமியிலும் சகல அதி காரமும் எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்.

உலக சுவிசேஷ ஊழியத்தை நிறைவேற்ற தேவையான வல்லமையை தருவதாக இந்த வாக்குத்தத்த வசனத்தில் கூறியுள்ளார். அவரது முழுமையான இந்த அதி காரம், மிஷனெரியாக செல்வதற்கு,எந்த நாட்டிற்குள்ளும் பிரவேசிப்பதற்கு, எந்த கலாச்சாரத்தையும் கடந்து செயல்படுவதற்கு அல்லது எந்த சமுதாய மனிதர்களிடம் நற்செய்தியை அறிவிக்க, மற்றும் அவர்கள் இயேசுவை விசுவாசிக்க உதவிசெய்வது போன்ற தேவையான செயல்களை செய்ய, கிறிஸ்து தன்அதிகாரத்தைக் கொடுக்கிறார்.

கிறிஸ்துவை அறியாத மக்களிடம் சென்று அவர்களை இயேசுவின் அடியவர்களாக்குவதே ஊழியத்தின் முதல் அடியாகும். போதிப்பது என்பது இறுதி இலக்காகும். சுவிசேஷத்தால் மாற்றம் பெற்றவர்கள், இரட்சிக்கப்பட்டு திருச்சபையாக, மறுமலர்ச்சிப் பெற்ற சமுதாயமாக வளருவது அதிக பலன் அளிக்கிறதாயிருக்கும்.

## 5. நற்செய்தியின் சாராம்சம் :

லூக்கா 24:44-48 இயேசு அவர்களை நோக்கி, மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக்குறித்து எழுதியிருக்கிறவைகளெல் லாம் நிறைவேறவேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக் கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே என்றார். அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்து கொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களை நோக்கி, எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியிருந்தது. அன்றியும் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியதாயிருந்தது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்.

லூக்கா இங்கு அறிவிக்கப்படும் சுவிசேஷத்தில் அடங்கியிருக்க வேண்டியகாரியங்களை தெளிவுபடுத்தி யிருக்கிறார். இந்த செய்தி பழைய ஏற்பாட்டிலும் குறிக்கப்பட்டுள்ளது. பாவத்திலிருந்து மன்னிப்பு பெறுவது என்பதே கிறிஸ்தவ செய்திகளின் முக்கிய அம்சமாகும். வேறெந்த மதமும் இத்தகைய பாவ மன்னிப்பைக் கொடுக்க முடியாது. இது எல்லா தேசத்திற்கும் பரப்ப வேண்டியதாகும். இந்தப் பணியை நிறைவேற்ற சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு வல்லமையோடே ஊழியத்தை நிறைவேற்றினார்கள்.

## 6. நற்செய்திபணியின் வழிமுறைகள்:

பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்(அப் 1:8)

இதுவே இயேசு வானத்துக்கு ஏறிப்போகும் முன்பதாக கொடுத்த கடைசி அறிவுரையாகும். பரிசுத்த ஆவியானவரின் வல்லமை பெறுவது, ஊழிய திட்டத்தை ஆண்டவரிடம் பெறுவது, அறுவடைக்கு பணியாட்களை பெறுவது அவசியம். பரிசுத்த ஆவியானவரே ஊழியத்தை நிறைவேற்ற தேவையான வல்லமையை தருகிறார். மிஷனெரிப் பணி மனிதனால் ஏற்படுத்தப்பட்டதல்ல. மாறாக தேவனால் ஆரம்பிக்கப்பட்ட, கொடுக்கப்பட்ட மிகப் பெரிய பணி. தேவையான மனிதர்களை அவரே ஏற்படுத்தி, வல்லமையினால் இடைகட்டி, பயன்படுத்துகிறார். மனித தொழில் நுட்பங்கள் இந்த பணிக்கு உதவி செய்ய முடியும். ஆனால் இவைகள் உலக சுவிசேஷ ஊழியத்தில் பரிசுத்த ஆவியின் இடத்தை ஒருக்காலும் பிடிக்க முடியாது. அப்போஸ்தல நடபடிகள் புத்தகத்தில் பரிசுத்த ஆவியின் வல்லமை முதன்மையாயிருப்பதையே நாம் காண்கிறோம்.

அப் 1:8 மிஷனெரிப் பணியின் மைய வசனம். இந்த புத்தகத்தில் சொல்லப்பட்ட திருச்சபை வளர்ச்சிக்கு இதுஅடிப்படையாக இருக்கிறது. முதலாவது சுவிசேஷம் யூதேயா, எருசலேம், சமாரியா மற்றும் எங்குமுள்ள புற ஜாதி களுக்கும் பிரசங்கிக்கப்பட்டது. இந்த அப் 1:8.இன் முக்கியப் பகுதியிலுள்ள வார்த்தைகள் எல்லா இடங்களிலும் இருக்கின்ற சாட்சிகளைக் குறிப்பதாக இருக்கிறது. எருசலேம், யூதேயா, சமாரியா மற்றும் இனம், மொழி, கலாச்சாரம், நாடுகளை கடந்து உலகத்தின் முடிவு பரியந்தமும் சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும்.

## 7. ஆண்டவராக நம் எஜமான் தரும் அதிகாரம் :

யோவான் 3:16இல், கொடுக்கப்பட்டுள்ள செய்தி யானது, பாவத்தில் வீழ்ந்த மனுக்குலம் தேவனோடு உறவை ஏற்படுத்தி அவருடைய பிள்ளைகளாகும்படியான அதி காரத்தை யாரெல்லாம் கிறிஸ்துவை அவர் தரும் மீட்பை விசுவாசித்து ஏற்றுக்கொள்கிறார்களோ, அவர்களுக்கு இலசவம ாகவே கொடுக்கப்படுகிறதை விளக்குகிறது. அவர்களுக்கு நித்தியவாழ்வை வாக்களிக்கிறது. பேதுரு ''என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வாரன்'' என்று இயேசு கூறியதைக் கேட்டார். எனவே அவர் தன் கடிதத்தில் ''அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை, நாம் இரட்சிக்கும்படிக்கு, வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறெரு நாமமும் கட்டளையிடப்படவும் இல்லை என்றார் (அப் 4:12).

## 8. மிஷனெரிப்பணியின் அவசரத் தேவை:

தொடக்கத்தில் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சி இருந்தாலும் இன்னும் பெரும்பாலான உலக மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படாமலிருக்கிறது. நமக்கு முன்பாக இருக்கும் இலக்கு மிகப்பெரியதாகும். எல்லா தேசங்களின் கலாச்சாரங்களைச் சார்ந்த மக்களுக்கும், மற்றும் பிற மக்களினங்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்படவேண்டும். யோசுவா திட்டத்தின் கணக்கீட்டில் 16,000 மக்கள் இனங்கள் இருக்கிறது. இதில் 9653 மக்கள் இனங்கள் இன்னும் சந்திக்கப்படவில்லை. எந்தவிதமான தனிப்பட்ட ஆலயங்கள் நிறுவப்படுவதற்கு போதுமான அளவு மக்கள் சேர்க்கப்பட வில்லை. சுவிசேஷம் நம் மேல் விழுந்த கடமை, அதை அறிவிக்காவிடில் எனக்கு ஐயோ. இன்றைய நாட்களில் திரள் கூட்ட மக்கள் சுவிசேஷத்திற்காக காத்திருக்கிறார்கள்.

''எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.'' (1 தீமோத் 2:4) தேவனின் சித்தமாகிய இந்த உயர்ந்த கட்டளையை நிறைவேற்றும்படி நாம் உணர்த்தப்படுகிறோம். இந்த செய்தி உலகமெங்கும் சென்றடைய ஜெபத்தோடு இந்த ஊழியத்தில் நம்மை ஈடுபடுத்திக்கொள்வோம்.

# இந்திய திருச்சபை வரலாறு

முந்திய இதழில் மலபாரில் இயேசு சங்கத் துறவிகள் ஆற்றிய அருட்பணியையும் சிரியன் திருச்சபை அருட்பணியாளர்களின் மூலம் கோவா மற்றும் தென் பகுதியிலும் திருச்சபை வளர்ந்து, பிரிந்த வரலாற்றை பார்த்தோம். இம்மாத இதழில் இயேசு சங்கத் துறவிகள் இந்தியாவில் ஏனைய பாகங்களில் சபைகள் உருவாக்கிய வரலாற்றை கவனிப்போம்.

கி.பி 1579-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் மொகலாய பேரரசர் அக்பர் கிறிஸ்தவ சமய உண்மைகளைத் தமக்குக் கற்பிக்க போதகர்களை அனுப்பிவைக்குமாறு கோவாவிலுள்ள இயேசு சங்கத்தைச் சேர்ந்த புனிதர் பவுல் கல்லூரிக்கு, வேண்டுதல் அனுப்பியிருந்தார். கோவாவில் இக்கடிதம் மாபெரும் உற்சாகத்தை எழுப்பியது. மொகலாயப் பேரரசர் உண்மையில் கிறிஸ்தவ சமயத்தை தழுவநேரிட்டால் இந்தியா முழுவதும் மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள ஏதுவாகும் என எதிர்பார்த்தனர். ஆகவே பேரரசனின் வேண்டுகோளின் படி ரூடால்ப் அக்குவாவிவா, அந்தோனி மான் சராத்தே, பிரான்சிஸ் ஹென்றி ஆகிய மூன்று அருட்தந்தையர்கள் சென்றனர். அக்பர் அவர்களை மிகுந்த மதிப்புடன் வரவேற்றார். கிறிஸ்தவ வழிபாட்டிற்கென ஒரு சிற்றாலயம் கட்டிக்கொள்ளவும் கட்டுப்பாடின்றி கிறிஸ்தவ போதனைகளை போதிக்கவும் அனுமதிக் கொடுத்தார். அக்பர் இஸ்லாம் மதப் போதனைகளை விட, கிறிஸ்தவ சமயப் போதனைகளை அதிகம் விரும்பி அருட்தந்தையர்கள் மூலம் கேட்டறிந்தார். இதனால் அக்பர் கிறிஸ்தவராகிவிடுவார் என எதிர்பார்த்தனர். ஆனால் கிறிஸ்தவராக வேண்டுமென்ற மெய்யான அக்கறை அவருக்கு இல்லை என்பதை பழக பழக தெரிய



## இயேசு சங்கத் திருப்பணிகள்

வந்தது. இந்து, சமணர், பௌத்தம், சௌராஷ்ரம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய அனைத்து மதத்தின் ஒருங்கிணைந்த கருத்துக்களை உடைய புதிய மதம் ஒன்றை உருவாக்கி, தன்னையே தலைமையுமாக கொண்ட தீன் இலாசஹி என்ற புதிய ஒரு சமயத்தை உருவாக்கினார். இதையறிந்ததும் இயேசு சங்கத் துறவிகள் கோவா திரும்பினர். இதன் பின்பு இயேசு சங்கத் துறவிகள் நற்செய்தி சென்றடையாத தமிழ்நாட்டின் பிறபகுதியை தெரிந்தெடுத்து சபைகளை உருவாக்கும் பணிகளில் ஈடுபாடுக் கொண்டனர்.

<u>ராபர்ட் .டி. நோபிலி</u>

இத்தாலியில் உயர் குடியில் பிறந்த ராபர்ட் டி நோபிலி என்னும் இயேசு சங்க அருட்தந்தை என்பவர் கி.பி 1605ம் ஆண்டு இந்தியாவுக்கு நற்செய்தி பணியாற்ற வந்தார். இவர் புத்தி கூர்மையும் நற்செய்தி பணி ஆர்வமுடையவராவார். இயேசு சங்க ஆயரின் தலைவராய் இருந்த ஆல்பர்ட் கார்சியா, என்பவர் நோபிலியை மேற்க்கு கடற்கரை பகுதிவாழ் மீனவர்களுக்கு, நற்செய்தி அறிவிக்க அனுப்பி வைத்தார். இதனால் இதற்கு மையமான இடம் மதுரையை மையமாக கொண்டு தமிழ்மொழியைக் கற்று, அருட்பணியை தொடர்ந்தார். அந்நாட்களில் மதுரையை நாயக்கர் மன்னர்கள் அரசாட்சி செய்தனர். அத்துடன் கல்விக்கு உறைவிடமாகவும், இந்து சமயத் தத்துவமும், விஞ்ஞானமும் நிறைந்த கோயில்களும் அங்கு இருந்தன. இங்கு இயேசு சங்கத் துறவியான பெர்னாட்டா மதுரைக்கு இடம் பெயர்ந்த மீனவர்கள் மத்தியில் ஊழியம் செய்து வந்தார். நோபிலி இந்தியா வந்தவுடன் கிறிஸ்தவம் ஏன் உயர் குல மக்கள் மத்தியில் பரவவில்லை? என்பதை ஆராயத் தொடங்கினார். பரவாமல் இருப்பதற்கு முக்கிய காரணம்

1.இந்துக்கள் கிறிஸ்தவ சமயத்தை பரங்கி மார்க்கம் எனக் கருதினர். பரங்கி என்னும் சொல் போர்த்துக்கீசியரையும், ஐரோப்பியரையும் குறிப்பதற்கு பயன்படுத்தினர். பொதுவாக மாட்டிறைச்சி சாப்பிடுகிறவர்கள், மது அருந்துகிறவர்கள், ஒழுக்கநெறி தவறுகிறவர்கள் இந்திய பண்பாட்டு நெறிக்கு முரண்பாடு உள்ளவர்கள் என எண்ணினார்கள்.

2.இந்தியாவின் தென் பகுதி நற்செய்தி பணிகள் அனைத்துமே கடற்கரை மீனவர்கள் மத்தியிலே நடைபெற்று வந்தது.

3. கிறிஸ்தவ சமயம், அயல் நாட்டு சமயம் என்ற எண்ணம் இருப்பதால் அயல்நாட்டு அம்சங்கள் களையப்பட வேண்டும்.

4. இந்தியரின் ஜாதி பேதங்களுக்குள்ளே இருந்தே இந்துக்களை கிறிஸ்துவுக்குள் கொண்டுவரவேண்டும் என தீர்மானித்து கிறிஸ்தவத்தை முற்றிலும் இந்திய மயமாக்க முனைந்தார் நோபிலி.

இதனால் ராபர்ட் டி நோபிலி இந்திய முறையில் வாழ முனைந்து, தனக்கு சமையல் செய்வதற்கு ஒரு பிராமனரை அமர்த்திக்கொண்டார். இந்து ஆசாரங்களை கற்ற இளைஞர்களுடனும், ஆசிரியர்களுடனும், கிறிஸ்தவ சமய உரையாடல்கள், விவாதங்கள் நடத்தினார். இதனால் பிராமனர்களும் நாயக்கர்களும் நோபிலியை தனது குருவாக ஏற்றுக்கொண்டு திருமுழுக்கு பெற்றனர்.

நோபிலி இந்திய கலாச்சாரத்தை ஏற்று கருப்பு அங்கிகளுக்கு பதிலாக காவி அங்கியை அணிந்தார். தோல் செருப்புக்கு பதிலாக கட்டை செருப்பை போட்டுக்கொண்டார்.

ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டும் உணவு அருந்தினார். இவ்வளவும் இறைச்சியை தவிர்த்து சைவ உணவையை உட்கொண்டார். பெரும் நேரத்தை தியானத்தில் செலவழித்து தன்னை காண வருகிறவர்களுக்கு இப்போது காண முடியாது தியானத்தில் இருக்கிறேன் என உதவியாளர் மூலம் சொல்லி அனுப்புவது உண்டு. தன்னை காண வருகிறவர்களுக்கு திண்ணையில் தரையில் அமர்ந்து தெள்ளத் தமிழ்நடையில் வேதபோதனைகளை, உவமைகளுடன் பேசினார். சமயம், தத்துவம், விஞ்ஞானம் ஆகியவற்றை குறித்து உரையாடினார். மேலும் தனது ஊழிய மையத்தை இந்து பிராமணர்கள் வசிக்கும் இடத்தில் சிறிய களிமண்ணாலான ஆசிரமம் ஒன்றை கட்டி அதிலே குடியிருந்தார். அதே நகரில் இயேசு சங்கத்தை சேர்ந்த துறவியை காணவேண்டுமானால் இரவில் சென்று பார்த்து விட்டு இரவே திரும்பிவிடுவார்.

இதனால் இவரது புகழ் நரகமெங்கும் பரவி அநேக இந்து இளைஞர்கள் இவரது சீடராக மாறினார்கள். இவரது சீடர்களில் ஒருவரான சிவதர்மா என்னும் தெலுங்கு பிராமண பண்டிதரோடு பழகி அவர்களிடமிருந்து சமஸ்கிருதத்தில் பேச கற்றுக்கொண்டார். சிவதர்மா வேத சூத்திரங்கள் சிலவற்றையும் கற்றுக் கொடுத்தார். இந்து வேதங்களை அறிந்து இந்து பிராமணர் அறிஞர்களோடு விவாதம் செய்தார். இவர் மூலம் சிவதர்மா 1609-ம் ஆண்டு கிறிஸ்தவத்தை ஏற்று திருமுழுக்கு பெற்றார். சுமார் 63 பிராமணர்கள், நாயக்கர்கள் சபையில் இணைந்தி ருந்தார்கள். அவர்கள் பூ நூல் போடுவதற்கோ, குடுமி வைத்து கொள்வதற்கோ, சந்தனம் பூசிக்கொள்ளவோ, ஜாதி யை விட்டு விடவோ, தடைசெய்யப்படவில்லை. விக்கிரக வணக்கங்களுக்கு மட்டும் விலகியிருக்க கட்டளையிட்டார். மேலும் ஒருவன் கிறிஸ்தவனாகும் போது ஜாதியை துறக்க வேண்டாம் எனவும் போதித்தார்.

நோபிலியின் பணி எப்பொழுதும் முன்னேற்றப்பாதையில் இருந்தது எனச் சொல்ல இயலாது. 1610ம் ஆண்டு நோபிலி உண்மையிலேயே பரங்கிதான் என குற்றச்சாட்டு எழுந்தது. காரணம் மீனவர் ஒருவர் அவரிடம் திருமுழுக்கு பெறவே, புதிய கிறிஸ்தவர்கள் தங்கள் ஜாதிய உரிமையை இழந்து விட்டோம் எனக் கூறி சிலர் பின்மாற்றமடைந்தனர். அதை எதிர்த்து நோபிலி ஒரு பொது அறிக்கையை வெளியிட்டார், தான் பரங்கியல்ல என்றும், ரோமாபுரியிலிருந்து வந்த உயர்குலத்து சன்யாசி என்றும், இதனை ஓலைச் சுவடியில் எழுதி அனைவரும் காணத்தக்கதாக தொங்கவிட்டிருந்தார். இதனால் சற்று அமைதி திரும்பினாலும், இவரது முறைமைகளை ம துரையைச் சார்ந்த இயேசு சங்க துறவி பெர்னாட்ா கடுமையாக எதிர்த்தும், இயேசு சங்க தலைவருக்கும், கோவா பிரதம பேராயருக்கும், போப்புக்கும் இவரது செயலை குறித்த கண்டன அறிக்கை அனுப்பப்பட்டது. இதைக் குறித்து விவாதிக்க 1619-ஆம் ஆண்டு ஒரு குழு அமைக்கப்பட்டது. பல ஆராய்ச்சிகளுக்கு பின்பு 1623ஆம் ஆண்டு பதினொன்றாம் கிரேக்கோரி இவரது ஊழிய முறைமைக்கு ஆதரவு தெரிவித்தார். ஆனால் இந்து சடங்குகளை கைவிட்டு, பூநூல் ஆயர் கையில் ஜெபித்து வாங்க வேண்டும், சந்தனம் மந்திரங்களோடு இல் லாமல் உடல் சுத்தத்தை மட்டுமே குறிக்கும் என முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இதனால் உற்சாகமான நோபிலி தி ருச்சி, நாமக்கல், சேர்ந்தமங்கலம் ஆகிய பகுதிகளிலும், தனது ஊழியத்தை உயர்குல மக்கள் மத்தியில் நிலை நாட்டினார். பின்பு 1645-ஆம் ஆண்டு இலங்கை சென்று அங்கு இயேசு சங்க தலைமை ஆயராக பணியாற்றி உடல் நலக் குறைவால் அங்கேயே மரித்தார். நோபிலி எழுதிய நூல்களான ஞான உபதேசம் மிகவும் பிரசித்தம ானதாகும். மேலும் கிறிஸ்தவ சித்தாந்தத்தை சமஸ்கிருத சுலோகங்களில் எழுதியிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். நோபிலிக்கு பின்பு அவர் நாட்டிய சபைகள் பெருமளவிற்கு வளர்ச்சி பெற்றதாக தெரியவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

<u>ஜான் டி. பிரிட்டோ</u>

மதுரை திருமலைநாயக்கருடன் நோபிலியின் நல் லுறவினால் சபைகள் உருவாக்கப்பட்ட பின்பு, அவருக்கு பின்பு ஆட்சிக்கு வந்தவர்கள், கிறிஸ்தவ சபைகளையும், ஊழியர்களையும் அதிகமாக துன்புறுத்தினார்கள். 1973-இல் ஜான் டி. பிரிட்டோ என்னும், இயேசு சங்க துறவி இந்தியாவின் தென் பகுதியான மதுரை மிஷன் பொறுப்பை ஏற்று அருட்பணியாற்றினார். இவர் உயர்குடியில் பிறந்த போர்த்துகீசியர். அப்போஸ்தலரைப் போல ஆர்வமும் ஆத்துமாக்களை வெல்லும் ஆற்றலும் உள்ளவர். இக்காலத்தில் மதுரை ஆதீனத்திற்குள் தஞ்சாவூர், செஞ்சி ஆகிய அரசுகளும் உட்பட்டு இருந்தன. அத்துடன் மிகுந்த துன்பத்திற்குள் சபைகளும், மிஷனெரிகளும் உட்படுத்தப்பட்டனர். மிஷனெரி பிரிட்டோவை, கொல் லுவதற்கு படைகளும் அனுப்பப்பட்டது. தெய்வாதீனம ாக அவர் காப்பாற்றப்பட்டார். 1686ம் ஆண்டு இராமநாதபுரம் சேதுபதி ஆட்சிக்குட்பட்ட பகுதியில் மறவர்கள் மத்தியில் நற்செய்தி அருட்பணியாற்ற சென்றார். அங்கே சில காலங்கள் கிறிஸ்தவ போதனை செய்து, அநேகருக்கு திருமுழுக்கு கொடுத்து சபைகளை உருவாக்கினார். அங்கு அவர் கைது செய்யப்பட்டு மன்னன் சேதுபதிக்கு முன்பாக நிறுத்தப்பட்டார். சேதுபதி மிஷனெரியை எச்சரித்து, அனுப்பி தன் எல்லைக்குள் நுழைய கூடாதென்று கட்டளையிட்டார். பின்பு தன் சுய நாடு திரும்பினார். ஆனால் இந்திய தேசத்தின் நற்செய்தி பாரத்தால் இரண்டு ஆண்டுகளுக்குள் இந்தியா திரும்பினார். கோவா இயேசு சங்க தலைமை பொறுப்பை ஏற்க வேண்டியபோது, அதை மறுத்து மீண்டும் மதுரை மிஷனுக்கே திரும்பினார். அதே ஆண்டில் மறவர் நாட்டிற்கும் சென்று தமது சீஷர்களை திடப்படுத்தினார். பல ஜமீன்தாரர்களுக்கு வேத போதனை அளித்து, அவர்களுக்கு திருமுழுக்கு கொடுத்தார். இவரது அருட்பணியில் சுமார் 4000 பேர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். அவர்களில் முக்கியமானவர் அரச சபையில் உள்ள தடியத்தேவர் என்பவர், கிறிஸ்துவை பற்றிக்கொண்டு திருமுழுக்கு பெற்றார். இவருக்கு 5 மனைவிகள். ஆனால் அருட்தந்தையின் ஆலோசனை ஏற்று முதல் மனைவியை விட்டு மீதம் 4 பேருக்கும் உதவி கொடுத்து விலக்கி விட்டார். விலக்கப்பட்டவர்களில் ஒருவர் மன்னர் சேதுபதியின் உறவினர். இவள் பிரிட்டோ மீது நடவடிக்கை எடுக்க சேதுபதியை வேண்டினாள். இதன் விளைவாக கிறிஸ்தவர்கள் மாபெரும் துன்பத்திற்கு ஆளாயினர். பிரிட்டோ கைது செய்யப்பட்டு குதிரையின் வாலில் கட்டப்பட்டு இழுத்து வரப்பட்டு, மன்னன் சேதுபதிக்கு முன் நிறுத்தப்பட்டார். சேதுபதி பிரிட்டோவை நாடு கடத்த முதலில் திட்டமிட்டார். ஆனால் பின்பு அவ்வெண்ணத்தை மாற்றி, இராமநாதபுரம் ஒரியூரில் சென்று அங்கு அவரை சிரைசேதம் பண்ண கட்டளையிட்டார். அதன்படி 1693ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் நான்காம் நாள் ஜான்.டி. பிரிட்டோ படைவீரர்களால் சிரைசேதம் பண்ணப்பட்டார்.

தொடரும்...

Rev.A.G தனபால்ராஜ்
ECI நல்மேய்பர் ஆலயம், நங்கநல்லூர், சென்னை.

இந்த மனுக்குலத்தை மீட்கும்படியாக பிதாவினால் அனுப்பப்பட்ட முதல் மினெரி இயேசு கிறிஸ்துவாகும். தேவன் தமது மக்களை அதிகம் நேசித்ததினால் தன்னுடைய ஒரே பேரான குமாரனை அனுப்பினார். சுவிசேஷ ஊழியத்தின் காரணகர்த்தர் தேவன் மட்டுமே. இரட்சிக்கப்பட்ட மக்களாகிய நாம் தேவ அன்பை மற்றவர்களுக்கும் பறைசாற்ற வேண்டும். அவர் நமக்குக் கட்டளை இட்டபடியால் கீழ்படிந்து நாம் செயல்படுகிறோம். சுவிசேஷ ஊழியம் அல்லது ஆத்தும ஆதாயம் என்பது தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்ட பிரதானப் பணியாகும்.

1. மிஷனெரி ஊழியம் தேவன் கொடுத்த வாக்குத்தத்தம் : (ஆதியாகமம் 12:1-3)

மனிதன் பாவத்தில் விழுந்த பிறகு தேவன் ஒரு இரட்சகரை அனுப்ப திட்டமிட்டு சாத்தானின் தலையை நசுக்கச் செய்தார். (ஆதி 3:15, ரோமர் 16:20) தெரிந்து கொண்ட மனிதனாலும், தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி மூலமாகவும் தேவன் இந்த பூலோகத்திலுள்ள எல்லா மக்களையும் ஆசீர்வதிக்க வாக்குத்தத்தம் செய்தார்.

2. மிஷனெரி ஊழியம் என்பது கிறிஸ்துவை விலைகொடுத்து வாங்கியதாகும்: (வெளி 5:9)

இயேசுநம்முடையபாவங்களுக்காக தன்னையே சிலுவையில் ஒப்புக் கொடுத்து பலியானார். நாம் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டிருக்கிறோம். எனவே நாம் எல்லாரும் கிறிஸ்து சிலுவையில் செலுத்திய விலைக்கிரயத்தினால் வாங்கப்பட்டுள்ளோம்(1கொரி 6:20). இயேசு தமது இரத்தத்தால் சகல கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும் அநேக ஜனங்களை மீட்டிருக்கிறார்.

3. மிஷனெரி ஊழியத்தில் திரள் அறுவடை வாக்கு செய்யப்பட்டுள்ளது: (மத்தேயு 9:37)

இன்று இந்த பூலோகத்தில் உள்ள 790 கோடி மக்களில் 400 கோடி மக்கள் இயேசுவோடுள்ள உறவுக்குள் இல்லாமலிருக்கிறார்கள். ஊழியர்களின் பற்றாக்குறையால் 240கோடி மக்கள் ஒருமுறையேனும் இயேசுவைப்பற்றி கேள்விப்படாமலிருக்கிறார்கள். 2000 வருடங்களுக்கு முன்பாக இயேசு ''போங்கள்'' என்று கட்டளையிட்டார். ஆனால் இன்று மக்களினங்கள் கிறிஸ்தவ ஊழியர்களை ''வா'' என வரவேற்கிறார்கள். உண்மையிலே இந்த உலகம் முழுவதும் சுவிசேஷத்திற்கு செவிசாய்ப்பது என்பது அற்புதமானதாக இருக்கிறது. எனவேதான் இயேசு தமது சீஷர்களிடம் ''அறுப்போ மிகுதி'' என்று கூறினார். முழங்கால்கள் யாவும் அவருக்கு முன்பாக முடங்கும், நாவுகள் யாவும் கிறிஸ்துவே தெய்வமென அறிக்கையிடும், நாட்கள் சமீபமாயிருக்கிறது.

4. மிஷனெரி ஊழியத்தில் வேலைக்காரர்களோ கொஞ்சம்: (மத்தேயு 9:37)

திருச்சபைகளில் உள்ள ஒவ்வொரு 20,000 விசுவாசிகளுக்குள்ளிருந்து ஒருவர் மட்டுமே சுவிசேஷத்தை சுமந்து சந்திக்கப்படாத மக்களுக்குள் செல்கிறார்கள். ஆசியா கண்டத்திற்கு அநேக மிஷனெரிகள் தேவைப்படுகிறார்கள். முக்கியமாக வட ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள், இந்தியா, ரஷ்யா மற்றும் கிழக்கத்திய நாடுகளுக்கும் தேவப்பணி செய்வதற்கு வேலைக்காரர்கள் தேவைப்படுகிறார்கள்.

5. இழந்து போனதை இரட்சிக்கும்படி மிஷனெரி ஊழியங்கள் தேவை: (யோவான் 3:18, 14:6)

சுவிசேஷப்பணியால் நற்செய்தியை மக்கள் கேட்டு இரட்சிக்கப்பட ஆண்டவரின் இறுதிக் கட்டளை காரணமாயிருக்கிறது. இயேசு தரும் நித்திய வாழ்வைப் பெறுவதற்கு மிஷனெரி ஊழியங்கள் முக்கியமானது மட்டுமல்லாமல் அவசரமானதுமாகும். யோவான் 3:18-''விசுவாசியாதவனோ ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று'' மத்தேயு 25:46-இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள். மக்களை நித்திய ஆக்கினையிலிருந்து மீட்டெடுப்பது நமது பொறுப்பாகும்.

6. தேவதிட்டத்தை நிறைவேற்ற மிஷனெரி ஊழியத்திற்கு மனிதர்கள் தேவை:

நாமும் யாரோ ஒருவரிடமிருந்து சுவிசேஷத்தைக் கேட்டோம். வேதாகமத்தில் குறிக்கப்பட்டுள்ள படி ஒவ்வொரு முறையும் யாராவது கிறிஸ்துவண்டை வருவதற்கு ஒரு மனித செய்தியாளரின் பங்கு உண்டு. திருச்சபையே இதன் வழிவகையாகும். இரட்சிக்கப்படும் திட்டத்திற்கு தேவன் ஒரு மனித செய்தியாளரை பயன்படுத்துகிறார். ஆகவே அவரது ஊழியத்திற்கு சுவிசேஷத்தில் நம்பிக்கை உள்ள அவரது பிள்ளைகள்



தேவைப்படுகிறார்கள். தேவன் இஸ்ரவேலை ஆசீர்வதிக்க ஆபிரகாமை தெரிந்து கொண்டார். மேலும் இந்த முழு உலகை ஆசீர்வதிக்க இஸ்ரவேலரை தெரிந்து கொண்டார். எனவே தேவதிட்டத்தை நிறைவேற்ற ஆண்டவர் மனிதர்களை தேடிக்கொண்டேயிருக்கிறார்.

7. மிஷனெரி பணியில் திருச்சபையின் முக்கியப் பங்கு: (அப் 1:8, ரோமர் 15:20)

இதைப் பின்பற்றுவதற்கு ஆதித்திருச்சபையே நமக்குக் கொடுக்கப்பட்ட முன் உதாரணமாகும். அவர்கள் பவுல் மற்றும் பர்னபாஸ் போன்ற தங்கள் சொந்த ஊழியக்காரர்களையே அனுப்பினார்கள். அவர்களை உலகத்தில் இருந்த புறஜாதி மக்களின் மத்தியில் சுவிசேஷத்தை அறிவிக்கச் செய்தார்கள். உலக சுவிசேஷப் பணியில் திருச்சபையே முக்கிய பொறுப்பானதாகும். திருச்சபையானது உலகத்திற்கு ஒளியாகவும் பூமிக்கு உப்பாகவுமிருக்கிறது.

8. தேவனின் மிஷனெரி ஊழியம் நிறைவேறும் : (வெளி 7:9, 21:24-26)

வெளி 7:9 இல் இவைகளுக்குப்பின் நான் பார்த்த போது இதோ சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்களிலும், பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக் கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள் வெள்ளைஅங்கி தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து சிங்காசனத் திற்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன். இதன் முடிவைப் பார்க்க நாமும் உழைக்க ஒப்புக்கொடுக்கும் பொழுது தேவன் நம்மைப் பயன்படுத்தி இதை நிறைவேற்றுவார்.


9. தேவனின் மிஷனெரி ஊழியத்திற்கு நாம் பொறுப்பாளிகள்: (2 கொரி 5:10)

2 கொரி 5:10இல் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும். இந்த பகுதி எங்கள் வாழ்க்கையை புதுப்பிக்கும்படியாக அமை ந்துள்ளது. தேவனின் மனிதர்கள் என்பது இந்த உலகத் திற்கு ஆசீர்வாதமானவர்கள் என்ற அர்த்தமாகும். மே லும் வரும் ஆபத்தைக் குறித்து மற்றவர்களை எச்சரிக்கும் பொறுப்புள்ளவர்களாயிருக்கிறோம் (எசேக் 12:17). எனவே ஆண்டவர் நமக்கு கொடுத்த தாலந்து, நேரம், செல்வத்தைப் பயன்படுத்தி நாம் தேவ இராஜ்ஜியத்தை கட்டுவோமாக. நாமே அந்த பொறுப்பாளிகள் என்பதை அறிந்த நாம் அதை அறிவிக்க வேண்டும்.''எவனிடத்தில் அதிகம் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகம் கேட்கப்படும்'' (லூக்கா 12: 47-48).

10. மிஷனெரி ஊழியம் இயேசுவின் கட்டளை: (மத் 28:18-20, யோவான் 20:21, அப் 1:8, 13:47)


சுவிசேஷ ஊழியம் மற்றும் கலாச்சாரம் கடந்த ஊழியம் இவைகளின் அடித்தளம் உயர்ந்த கட்டளையாகும். ஏனென்றால் தேவன் தன்னைப் பின்பற்றுகிறவர்களுக்கு கடைசியாகக் கொடுத்த அறிவுரையான உலகமெங்கும் போங்கள், மேலும் உலகம் முடியுமட்டும் நான் உங்களுடன் இருப்பேன் என்றார். கிறிஸ்தவர்களின் அனைத்து சந்ததி களும் இந்த கட்டளைகளால் கட்டித் தழுவப்பட்டு, நன்றாக செய்தீர்கள் என் விசுவாச உத்தம ஊழியர்களே: என்று தேவனால் கூறப்படும்படி இறுதிவரை அவருக்கு முன்பாக நிற்போம் என்று நான் நம்புகிறேன்.

**Rev. E. Rajan**




விசுவாசம், கீழ்படிதல் இவையிரண்டும் ஒரேச் செடியில் பூத்த மலர்கள். தேவனை விசுவாசிப்பவர்கள் அவருக்கு கீழ்ப்படிவான். அவருக்கு கீழ்ப்படிபவன் அவரை விசுவாசிப்பான். - சி. ஹெச் ஸ்பர்ஜன்.

கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட இருதயம் அவருடைய அன்பைப் பறைசாற்றுகிறது. மதம் சீர்திருத்தத்தை உண்டாக்குகிறது. ஆனால் சுவிசேஷம் மட்டும் மறுரூபமாக்குகிறது.




கர்த்தர் தமது பணிக்கு உங்களை அழைக்கும்போது அரச பதவியே உங்களை தேடிவந்தாலும் அதற்கு இணங்குவதன் மூலம் உங்கள் தரத்தைக் குறைத்துக் கொள்ளாதேயுங்கள்! தேவதூதர்களும் செய்யக்காத்தி ருந்த சுவிசேஷப்பணி உங்களை தேடி வரும்போது அதை ஒரு பெரும் சிலாக்கியமாய் ஏற்று உங்கள் வாழ்வை தேவனுக்கு அர்ப்பணித்து முன்னேறுங்கள்!

1. விருதுநகர்: பணம், நகைக்காக 2 நாள்களில் 5 பேர் கொலை; வடமாநில கும்பல் கைவரிசையா? – போலீஸ் விசாரணை! கொலை செய்துவிட்டு தப்பிச் சென்றவர்களை போலீஸார் சீக்கிரம் தேடி கண்டுபிடிக்க, தேவன் தாமே ஒவ்வொருவரையும் பாதுகாக்கவும், குற்றவாளிக்கு தகுந்த தண்டனை வழங்கப்படவும் ஜெபிப்போம்.

2. போலி சாமியார் பேச்சைக் கேட்டு ஆடு மேய்க்கும் சிறுவனை பலி கொடுத்த தம்பதி. ஆண் குழந்தைக்காக நேர்த்திக் கடன். நரபலி கொடுக்கும் மூடநம்பிக்கைகளிலிருந்து மக்கள் விடுதலைப் பெற, சாபத்தைக் கொண்டுவரும் பாவங்களிலிருந்து விடுவிக்கப்பட, மக்கள் மனிதர்களை தெய்வங்களாக பார்த்து அவர்கள் சொல்வதையே செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்து இந்திய மக்கள் விடுதலைப் பெற, இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

3. இந்தியாவுக்கும் வந்தது குரங்கு அம்மை. ஆப்பிரிக்காவில் முதன் முதலில் கண்டறியப்பட்ட குரங்கு அம்மை நோய், தற்போது உலகம் முழுவதும் 50க்கும் மேற்பட்ட நாடுகளில் வேகமாக பரவி வருகிறது. 6 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டு உள்ளனர். பாதிக்கப்பட்டோர் சுகம் அடைய, குரங்கு அம்மையால் பாதிக்கப்பட்ட நபரை சந்தித்தவர்கள் கண்காணிக்கப்பட்டு உரிய சிகிச்சையை விரைவில் கொடுக்க ஜெபிப்போம்.

4. வெளுத்து வாங்கும் மழை; குஜராத் உள்ளிட்ட 3 மாநிலங்களில் 18 பேர் உயிரிழந்த சோகம். டெல்லி மட்டுமல்லாது குஜராத், மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் தெலங்கானா என பல மாநிலங்கள் கனமழையை எதிர்கொண்டுள்ளன. இதுவரை இந்த மாநிலங்களில் 18 பேர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரின் ஆறுதலுக்காகவும், கனமழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வேண்டிய பாதுகாப்பு கிடைக்கவும் மீட்புப் பணிகள் துரிதப்படுத்தபடவும் ஜெபிப்போம்.

5. நாயின் வாயில் இரும்புச்சங்கிலி கட்டி போடப்பட்ட பூட்டு; லாவகமாக அகற்றிய தீயணைப்புத்துறையினர்!! நாய்களின் வாலில் வெடி வெடிக்க வைப்பது, நாயின் கழுத்தில் பிளாஸ்டிக்குகளை கட்டிவிடுவது, அடித்துத் துன்புறுத்துவது போன்ற தேவையற்ற செயல்களில் ஈடுபடுகிறவர்கள் கண்டிக்கப்பட, ஆறறிவு மனதர்களை விட நன்றியுள்ள பிராணியை வதைப்பது தண்டனைக்குரியது என்பதை மக்கள் புரிந்து கொள்ள ஜெபிப்போம்.

6.ஒருமுறை மட்டும் பயன்படுத்தக்கூடிய நெகிழி தடை: இது சிறு குறு தொழிற்சாலைகளை அதிகம் பாதிக்கும் என்பதால், அவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் வேறு ஏற்பாடுகளை அரசாங்கம் செய்து கொடுக்க, இத்தகைய நல்ல முயற்சியினால் நமது சுற்றுசூழல் பாதுகாக்கப்பட்ட ஜெபிப்போம்.

7. சென்னை: பணம் கேட்டு மிரட்டல்... வாக்கிங் சென்றவருக்குக் கத்திக்குத்து! வாலிபர்கள் பணத்திற்காக இப்படிப்பட்ட வழிப்பறியில் ஈடுபடாமல் மனந்திரும்ப, பணத்தை கொடுக்க மறுத்ததால் அந்த நபரை, கத்தியால் குத்தி விட்டு தப்பிச் சென்றார். கொலைவெறிகள் நம் தேசத்தை விட்டு அகலவும் ஜெபிப்போம்.

8. ஆன்லைன் மூலம் மோசடி... நைஜீரிய வாலிபர் உட்பட 3 பேர் கைது! மக்களை ஏமாற்றி பணம் பறிக்க நினைக்கும் இது போன்ற வாலிபர்கள் மனம் மாற, இது போன்ற ஆன்லைன் மோசடிகள் தடுக்கப்பட சைபர் கிரைம் அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜெபிப்போம்.

9. +2 மாணவன் தூக்கு போட்டு தற்கொலை!!! தொடரும் சோகம்!! தேர்வில் தோல்வி அடைந்த பள்ளி மாணவர்கள் மத்தியில் தொடரும் தற்கொலை எண்ணங்கள் முற்றிலுமாக மாற, தற்கொலையைத் தூண்டும் பிசாசின் கிரியைகள் அழிக்கப்பட, எதிர்காலத்தைக் குறித்து பயந்து என்ன செய்வதென்று அறியாமல் மனஉளைச்சலில் பாதிக்கப்படும் மாணவர்களுக்கு உரிய ஆலோசனைகள் கொடுக்கப்பட ஜெபிப்போம்.

10. செல்போன் உலகத்திற்குள் தொலைந்து போகும் குழந்தைப் பருவமும்; பெற்றோர்கள் கவனிக்க வேண்டியவையும்..! செல்ஃபோன் அதிகமாக பயன்படுத்தும் குழந்தைகள் மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பல் வேறு பிரச்சனைகளுக்கு உள்ளாகும் சூழல் உள்ளதால் பெற்றோர்கள் கவனமாக இருக்க, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடன் நேரம் செலவிடவும், அவர்களை கண்காணிக்கவும், அவர்களுக்கு தகுந்த ஆலோசனை வழங்கவும் ஜெபிப்போம்.

# கடந்தமாத ஜெப கரிசனைகள்




- Allen



# விரிவாக்கப்பணியின் ஜெபக்குறிப்புகள்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மூன்று மிக முக்கியமான பிரிவுகளில் முன்னேற்றப்பணி(விரிவாக்கப்பணி)யும் ஒன்றாகும். முன்னேற்ற பணி என்பது நமது இயக்கத்தின் தரிசனத்தையும், தேசத்தின் நிலமையையும் மக்களோடு பகிர்ந்து கொண்டு அவர்களுக்குள் தேசத்தைக் குறித்த பாரத்தையும், மிஷனெரி தரிசனத்தையும் ஏற்படுத்துவது, முன்னணியிலிருந்து பணியாற்றும் ஊழியர்களுக்காகவும், அவர்கள் செய்யும் ஊழியங்களுக்காகவும் குழுக்களாக கூடி ஜெபிக்கத் தூண்டுவது, தேசத்தின் நிலமையை எடுத்துக் கூறி அவர்கள் மத்தியில் பணி செய்ய முழு நேரப்பணிக்கு அழைப்பு கொடுப்பது, தேவை நிறைந்த பணியை ஜெபத்தாலும், தங்களின் ஈகையாலும் தாங்க முன்வர அறைகூவல் கொடுப்பது என இந்த பணியில் மண்டல, பிராந்திய, முன்னேற்றபணி செயலர்கள், கௌரவ பிராந்திய, முன்னேற்றப்பணி செயலாளர்கள், பணி மாவட்ட தலைவர்கள், ஸ்கேன் தலைவர்கள், வாலிபர் தலைவர்கள், பெண்கள் தலைவர்கள், ஜெபப்பிரிவு மற்றும் ஜெபக்குழு தலைவர்கள் என பல நிலையில் உடன் இணைந்து பணி செய்கின்றனர். அனைவருடைய கடினமான முயற்சிகள் தான் இதுவரை இவ்வூழியத்தில் தேவன் தந்த ஆசீர்வாதங்களுக்கு காரணமாக உள்ளது. இப்படிப்பட்டதலைவர்களின் குடும்பங்களுக்காகவும், அவர்களின் தியாகங்களுக்காகவும் பாரத்தோடு ஜெபிப்போம்.

**கீழ்கண்ட முன்னேற்ற பணி முழுநேர ஊழியர்களுக்காக ஜெபிப்போம்:**

<u>விரிவாக்கப்பணி செயலர்:</u>

திரு. இம்மானுவேல் ரஞ்சித்சிங்
திருமதி. வசந்தி இம்மானுவேல்
திருமதி. ஷைனி ஜோசப்

<u>மண்டல செயலர்கள்:</u>

திரு. சுந்தர்சிங், திருமதி. விஜிலா
திரு. மணிமாறன், திருமதி. செல்வி
திரு. டேனியேல் தாமஸ், திருமதி. பிரேமலதா
திரு. கிங்ஸ்லி, திருமதி. அருணா
மற்றும் ஒரு கௌரவ மண்டல செயலர்

<u>பிராந்திய செயலர்கள்:</u>

திரு. TYP .ஆசீர்
திரு. ஜெயசேகர், திருமதி. ஜெமி
திரு. C.R. ஜார்ஜ், திருமதி. வசந்தி
திரு. ரவிக்குமார், திருமதி. கிறிஸ்டா
திரு. பால்ராஜ், திருமதி. ஹெப்சி
திரு. டேவிட், திருமதி. எலிசபெத்
திரு. ஜேக்கப்பிரதீப், திருமதி. சிந்தியா
திரு. ஆண்ட்ரு ஜவஹர், திருமதி. ஹெப்சிபா
திரு. வின்செண்ட், திருமதி. லில்லி
திருமதி. பாக்கியம் கொர்நேலியு
திரு. பிரைட் ஜெயக்குமார், திருமதி. பியூலா
திரு. ஆசீர் செல்வராஜ், திருமதி. மார்கிரேட்
திரு. மெயின்ராஜ், திருமதி புனிதா
திரு.ஜான் சாமுவேல், திருமதி. மிக்கேலம்மாள்
மற்றும் 16 கொளரவ பிராந்திய செயலர்கள்

<u>முன்னேற்ற பணி செயலாளர்கள்:</u>

திரு. ரூபன் சாமுவேல், திருமதி. மரகதமணி
திரு. எட்வர்ட், திருமதி. ஜிக்கி
திரு. ஐசக் தனசிங், திருமதி. லதா
திரு லக்ஷ்மணன், திருமதி. பிரின்ஸஸ்
திரு. ஜான் பெனின், திருமதி. ஷீபா
திரு. எசேக்கியா, திருமதி. எஸ்தர்
திரு. அசரியா ராஜ்குமார், திருமதி. ஜெபராணி
திருமதி. அனியா ஜோஸ்பின்
திரு. K.V. சந்திரன் திருமதி. ஜலின்
திரு. சுந்தரம்
திரு. ஆல்பர்ட் சாமுவேல், திருமதி. ஹெப்சி
திரு. சாம்பால், திருமதி. பிரின்ஸி
திரு. பெஞ்சமின், திருமதி. கிரேஸ்
திரு. அன்பையா, திருமதி. மேரி
திருமதி. குளோரி ராபர்ட்
திருமதி. அனுஷ் பீட்டர்
மற்றும் 218 கௌரவ முன்னேற்ற பணி செயலாளர்கள்

**இந்த ஆண்டின்(2022-23) முன்னேற்ற பணி ஊழிய திட்டங்களுக்காக ஜெபியுங்கள்:**

1. தமிழகமெங்கும் உன்னத திட்டத்தை நோக்கி...2022 இத்திட்டத்தின் மூலம் கீழ்கண்ட செயல்முறைகளை நிறைவேற்றிட ...

5355 புதிய அங்கத்தினர்கள்
1292 ஜெபக்குழுக்கள்
865 குழந்தை தாங்குவோர்
தமிழகமெங்கும் 1000 மணி ஜெபநேரங்கள்
83 முழுநேர மிஷனெரிகள்
780 புதிய தலைவர்கள்
540 மிஷனெரி தாங்குவோர்
35,725 கிராமங்களில் சுவிசேஷம் சென்றடைய (ஒரு கிராமத்திற்கு ரூ3000/-)

2. ஜெபப்பிரிவு, ஸ்கேன்பிரிவு, வாலிபர், இளம் வாலிபர் பிரிவு மற்றும் பெண்கள்பிரிவு ஆகிய பிரிவில் பணி செய்யும் மிஷனெரிகளான திரு. டேனியேல் டேவிட், மறைதிரு. அகஸ்டஸ் புஷ்பராஜ், திரு. டேனியேல் அருள்மணி மற்றும் திருமதி. மணிசெல்வி சாரதி அவர்களுக்காகவும், அவர்கள் ஊழியங்களுக்காகவும் ஜெபிப்போம்.
3. அனைத்து முன்னேற்ற பணி எல்கைகளிலும் ஜெபக்குழுக்களை விரிவு படுத்த...
4. குடும்ப கூடுகை, அறைகூவல் கூடுகை, பெண்கள், வாலிபர் கூடுகை, இளம் வாலிபர் கூடுகை, ஸ்கேன் கூடுகை என 851 கூடுகைகளை கிரமமாக நடத்திட...
5. ஜெபித்து தாங்கும் மாநிலத்திற்கு சென்று 3 நாட்கள் உபவாசித்து ஜெபிக்க...
6. கொரோனா தொற்று காரணமாக அநேக தலைவர்களை இழந்துள்ளோம் எனவே புதிய தலைவர்களை கண்டுபிடிக்க.
7. அனைத்து முன்னேற்ற பணி ஊழியர்களும் தேவனோடு உள்ள உறவிலும், குடும்ப உறவிலும், சக ஊழியர்களோடு உள்ள உறவிலும் பெலப்பட....
8. தேவன் அழைத்த அழைப்பில், அர்ப்பணிப்பில், தரிசனத்துடனும், தீவிரத்துடனும் பணிகளை நிறைவேற்றிட...
9. மனசோர்விலிருந்து விடுபட்டு நல்ல சரீர சுகத்தோடு தேவபணியை செய்ய, குடும்பத்தின் தேவைகள் சந்திக்கப்பட...
10. முன்னேற்ற பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் குழந்தைகளுக்கு தேவன் நல்ல சுகத்தைக் கொடுக்க...

திரு. TYP ஆசீர் மகன் - தாம்சன்
திரு. ஜெயசேகர் மகள் - ஜெஸி மிராக்ளின்
திரு. கிறிஸ்டோபர் மகள் - கவிதா
திரு. C.R. ஜார்ஜ் மகள் - அப்பியா
திரு. அன்பையா மகள் - அக்னஸ்
திரு. ஜான் பெனின் மகள் - கரோலின்

Rev. Emmaual Ranjithsingh

# facebook

மோசம் போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களை கெடுக்கும். (1 கொரி 15 :33)

2004 இல் மார்க் ஜுக்கர்பெர்க் மற்றும் சக ஹார்வர்ட் ரூம்மேட்களால் உருவாக்கப்பட்டதிலிருந்து, Facebook பல பில்லியன் பவுண்டு தளமாக வளர்ந்துள்ளது. Facebook பயனாளர்கள் ஒவ்வொருநாளும் அதிகரிப்பதுடன், போட்டியும் அதிகரித்துள்ளது. பதிவுசெய்யப்பட்ட ஒரு பில்லியன் கணக்குகளைத் தாண்டிய சந்தையில் முன்னணியில் இருக்கும் முதல் சமூக வலைப்பின்னல் Facebook ஆக உள்ளது. Facebook நிறுவனம் தற்போது நான்கு மிகப்பெரிய சமூக ஊடக தளங்களையும் கொண்டுள்ளது, ஒவ்வொன்றும் ஒரு பில்லியனுக்கும் அதிகமான மாதாந்திர செயலியில் உள்ள பயனர்களைக் கொண்டுள்ளது: Facebook (Core platform), WhatsApp, Facebook Messenger மற்றும் Instagram.

## Facebook பயன்பாட்டைப் பற்றிய சில புள்ளி விவரங்கள்:

☞ தற்போது உலகளவில் 2.91 பில்லியனுக்கும் அதிகமான மாதாந்திர செயலியில் உள்ள பயனர்களைக் கொண்டுள்ளது. (Meta 2022)

☞ உலகளவில் ஃபேஸ்புக் பயனாளர்களில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. இது ஆச்சரியமாக இருந்தாலும், 10% பேஃஸ்புக் பயனர்கள் மட்டுமே அமெரிக்கா அல்லது கனடாவில் இருந்து வருகிறார்கள்.

☞ இந்தியாவில் மொத்தம் 290 மில்லியன் பேஸ்புக் பயனாளர்களின் புள்ளிவிவரம் உள்ளது.

☞ இது இந்தியாவின் மொத்த மக்கள் தொகையான 1.38 பில்லியன் மக்களில் தோராயமாக 22.3% ஆகும். 2021 இல் மொத்த உலக மக்கள் தொகையில் இந்தியாவில் சுமார் 17.7% ஆக உள்ளது.

☞ ஒவ்வொரு நாளும் சராசரியாக 1.62 பில்லியன் பயனர்கள் பேஸ்புக்கைப் பார்வையிடுகின்றனர். அதாவது மொத்த உலக மக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதியினர் தினசரி செயலில் உள்ள பயனர்கள் !

☞ 2021-இல் ஒவ்வொரு நிமிடமும் 400 பயனர்கள் Facebook-இல் பதிவு செய்திருக்கிறார்கள்.

☞ அதே நிமிடத்தில், 510,000 க்கும் மேற்பட்ட கருத்துகள் பதிவிடப்பட்டுள்ளது. 293,000 நிலை புதுப்பிப்புகள் உள்ளன, 136,000 புகைப்படங்கள் பதிவேற்றப்பட்டுள்ளது.

☞ பேஸ்புக் மொபைல் பயனர்கள் ஒரு நாளைக்கு 57 நிமிடங்கள் செயலியில் செலவிடுகிறார்கள்.

☞ மக்கள் ஒவ்வொரு நாளும் Facebook பயன்பாட்டைப் பயன்படுத்தும் சராசரி நேரம்: ஒவ்வொரு மாதமும் சராசரியாக 28 மணிநேரம் அல்லது ஆண்டுக்கு 14 முழு நாட்கள், வருடத்திற்கு 20,000 நிமிடங்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

☞ உலகளவில் சராசரியாக 100 மில்லியன் மணிநேரம் பேஸ்புக் பயனர்களால் தினமும் பார்க்கப்படுகிறது. சமீபத்திய ஆய்வில், 85% பேர் ஃபேஸ்புக் வீடியோக்களை ஒலி இல்லாமல் பார்ப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. தினமும் 8 பில்லியனுக்கும் அதிகமான வீடியோ பதிவுகள் பெறப்படுகின்றன. வீடியோ உள்ளடக்கம் மற்ற வகை சமூக ஊடக உள்ளடக்கத்தை விட 89 மடங்கு அதிகமாக மக்களால் பகிரப்படுகிறது. Facebook-இல் முதலில் பதிவேற்றப்பட்ட வீடியோக்கள் YouTube போன்ற பிற வீடியோ தளங்களை விட 10 மடங்கு அதிகம். உலகெங்கிலும் உள்ள பேஸ்புக் பார்வையாளர்களில் கிட்டத்தட்ட 81.8 சதவீதம் பேர் மொபைல் ஃபோன் வழியாக மட்டுமே தளத்தை அணுகுகிறார்கள்.

## ஜெபக்குறிப்புகள்:

1. Facebook சமூக வலைதளத்தை உபயோகிப்போர் மனந்திரும்ப, தேவையில்லாத காரியங்களில் சிக்கியுள்ளோர் விடுதலை பெற ஜெபிப்போம்.
2. Facebookபோன்ற சமூக வலைதளங்களில் சீரழியும் இளைய தலைமுறையினர் பாதுகாக்கப்பட, ஞானமாக நடந்து கொள்ள ஜெபிப்போம்.
3. Facebook மூலம் முகம் அறியாத நபர்களிடம் சட்டிங் செய்து பின் அவர்களை யாருக்கும் தெரியாமல் சந்திப்பது போன்ற பழக்கம் மாணவர்கள் மத்தியில் பெருகி வருகிறது. அவர்கள் இந்த அடிமைத்தனத்திலிருந்து வெளிவர ஜெபிப்போம்.
4. மாணவர்கள் சமூக வலைதளங்களுக்கு அடிமைப்பட்டு தங்கள் நேரத்தையும், தாலந்துகளையும் வீணடிக்காமல் படிப்பில் கவனம் செலுத்த ஜெபிப்போம்.
5. Facebook மற்றும் சமூக வலைதளத்தில் ஏற்பட்ட பழக்கத்தால் பல சிறுமிகள் தற்கொலை மற்றும் கொலை சம்பவங்களுக்கு உள்ளாகியுள்ளனர். சமூக வலைதளங்களில் சிக்கியுள்ள சிறுவர், சிறுமிகள் பிசாசின் கிரியைகளிலிருந்து விடுவிக்கப்பட ஜெபிப்போம்.
6. Facebook லுள்ள தவறான வீடியோக்கள் மற்றும் Fake ID முழுவதுமாக அழிக்கப்பட ஜெபிப்போம்.
7. Facebook live-ல் வந்து தற்கொலை செய்யும் நிகழ்வு Treanding ஆகும் நிலை முற்றிலும் மாற, Facebook நிறுவனம் இது போன்ற காரியங்களை தடைசெய்ய தீர்மானங்களை கொண்டு வர ஜெபிப்போம்.
8. Facebook -ஆல் பணம் மோசடி செய்யப்பட்டு அநேகர் வாழ்வை தொலைத்துள்ளனர். இவர்களுடைய அவலநிலை மாற ஜெபிப்போம்.
9. Facebook மூலம் ஆண்டவருடைய சுவிசேஷம் சென்றடைய அழியும் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.
10. 1 தெசலோ 3:3 வசனத்தின்படி பரிசுத்தமுள்ளவர்களாக கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்ற ஜெபிப்போம்.

Mrs. Hepzi Sheela

| | |
|---|---|
| மக்கள் தொகை | : சுமார் 4,97,000 இலட்சம் |
| பேசும் மொழி | : இந்தி, போஜ்புரி |
| கிறிஸ்தவர்கள் | : 0.10% |
| இந்துமதம் | : 99.10% |

இந்தியாவின் உத்திரப்பிரதேச மாநிலத்திலும் அதனைச் சுற்றியுள்ள அண்டை மாநிலங்களிலும் வாழ்ந்து-வரும் நட் மக்கள், கைதேர்ந்த பாடகர்கள், நாட்டியக்காரர்கள் மற்றும்பல்வேறுவித்தைகள்செய்வதில்வல்லவர்கள். இதுவே இவர்களின் பாரம்பரிய தொழிலாகும். இவர்கள் தங்களை ராஜ்நட் என்றும் அழைத்துக் கொள்கின்றனர். தங்களது பூர்வீகம் ராஜஸ்தான் என்றும், தாங்கள் ராஜ புத்திர வம்சா வழியைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறிக் கொள்கின்றனர். மேலும் பன்மதி என்ற மாற்றுப் பெயரும் இவர்களுக்கு உண்டு. திகைப்பூட்டுவோர் என்று அதற்கு அர்த்தம். குஜராத், டெல்லி, உத்தரப்பிரதேசம் தவிர பிற மாநிலங்களில் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

<u>இம்மக்களின் வாழ்க்கை முறை மற்றும் வசதி பற்றிய விவரங்கள்:</u>

இம்மக்களை அரசாங்கம் புறக்கணிக்கின்றனர். இவர்களுக்கு வளமான நிலம் இல்லை. சரியான பள்ளிகள் கிடையாது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்க தயாராக இல்லை. பெண்கள் மது அருந்தும் பழக்கம் உடையவர்களாக இருக்கின்றனர். பிச்சை எடுக்கின்றனர். ஏழ்மையில் உள்ளனர்.

<u>இவர்கள் மத்தியில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்கள் பற்றி...</u>

2005ம் வருடம் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு திரு. ராஜதுரை அவர்கள் மூலம் இம்மக்கள் மத்தியில் ஊழியம் ஆரம்பிக்கப்பட்டது. அதை தொடர்ந்து திரு. முத்துக்குமார், திரு. மார்டின், திரு மங்குவாய் குடும்பம் இவர்கள் மத்தியில் ஊழியம் செய்து வந்தனர். அதன் பிறகு இவர்கள் மத்தியில் நல்ல மாற்றங்கள் உருவாகின. வேதாகமம் படிப்பதற்கென்று ஹிந்தி மொழி கற்றுக் கொண்டனர். ஒரு காலத்தில் நட் மக்கள் தீண்டத்தகாதவர்களைப்போல் கருதப்பட்டனர். இவர்கள் அழுக்கான ஆடை அணிந்து இருப்பதினாலும், ஏழைகளாகத் தெரிவதினாலும் பிற இன மக்கள் இவர்களோடு தொடர்பு வைத்திருப்பதில்லை. தற்போது கான்பூர்மாவட்டம் மற்றும் ஃபத்தேபூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள 22 கிராமங்களில் நமது ஊழியம் நடைபெற்று வருகிறது. நட் சிறுவர்களை படிக்க வைக்க 2011 பொக்கராயன் சிறுவர் மேம்பாட்டு மையம் துவங்கி தற்போது 22 பிள்ளைகள் கல்வி பயில்கின்றனர். நட் சமூகத்தில் தற்போது சகோ. சாந்தகுமார் குடும்பம் ஊழியம் செய்து வருகிறார்.




<u>ஜெபக்குறிப்புகள்...</u>

1. நமது பொக்கராயன் விடுதிகளில் படிக்கும் நமது விசுவாசிகளின் பிள்ளைகளின் கல்வி, ஞானம் மற்றும் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.
2. இம்மக்கள் நிரந்தரமாக தங்கள் இருக்கும் இடங்களில் போதுமான வருமானம் கிடைக்கும் தொழில்கள் கிடைக்க ஜெபிப்போம்.
3. இம்மக்கள் மத்தியில் காணப்படும் குழந்தை திருமணமும், குடிப்பழக்கமும் இவர்களை விட்டு அகன்று போக ஜெபிப்போம்.
4. இம்மக்கள் மத்தியில் அதிகமான பணித்தளங்கள் திறக்கப்பட, அநேக ஊழியர்கள் தேவனால் எழுப்பப்பட ஜெபிப்போம்.
5. இம்மக்கள் மத்தியில் காணப்படும் புகைப்பிடித்தல் பழக்கம் முற்றிலும் மறைய ஜெபிப்போம்.
6. எஞ்சியுள்ள இலட்சக்கணக்கான நட் இன மக்கள் தேவனை அறிந்து கொள்ள...
7. இவர்கள் மத்தியில் பணி செய்யும் ஊழியர்களுக்காக, சுவிசேஷத்திற்கு திறந்த வாசல் கிடைக்க, ஆலயங்கள் எழும்ப....
8. ஆவி வணக்கம் பழக்கத்திலிருந்து விடுதலை பெற, வேதத்தைக் கற்றுக் கொள்ள இவர்களுக்கு ஆர்வம் உண்டாக...
9. வரவிருக்கும் நாட்களில் இன்னும் பல கிராமங்களில் சபைகள் உருவாக ஜெபிப்போம்.
10. நட் சமூகப் பெண்களுக்கு கல்வி கற்க எழுத்தறிவு தொடங்கப்பட ஜெபிப்போம்.
11. சில மாவட்டங்களில் மட்டுமே பணிபுரியும் நிலை மாறி பல மாவட்டங்களை சுவிசேஷம் சென்றடைய, அநேக சுதேச, தன்னார்வ ஊழியர்கள் எழும்ப ஜெபிப்போம்.
12. இம்மக்கள் மத்தியில் ஊழியம் செய்யும் நமது மிஷனெரிகளான திரு. ஓம் பிரகாஷ் குடும்பத்திற்காகவும், திரு. சாந்தகுமார் குடும்பத்திற்காகவும், சுதேச ஊழியர்களான திரு. லாலாராம் குடும்பம், திரு. ஜெயலால் குடும்பம் மற்றும் திரு. விஜய் குடும்பத்திற்காகவும் அவர்களை தேவன் வல்லமையாக பயன்படுத்த பாரத்தோடு ஜெபிப்போம்.

*-Mr.Shanthakumar, U.P*




# சக்தியில்லா மக்கள்

இந்த மாதம் ‘‘சக்தியில்லா மக்கள்’’ என்ற தலைப்பில் நம் தேவனிடம் மன்றாடுவோம். நம் தேசத்தில் எத்தனையோ மக்கள் நம்மில் ஒருவரைப் போல் இருந்தாலும் அவர்களுக்கு அடிப்படை சுதந்திரம் கூட கிடைப்பதில்லை . ஜாதி என்னும் போர்வையில் நம்மிடையே இருக்கும் மக்கள் சக்தியில்லாதவர்களாக கருதப்படுகின்றனர். இருக்க இடம், படிக்க பள்ளி, வேலை செய்ய தொழில் செய்யவிடாமல் மறுக்கப்படுகின்றனர். பிறப்பால் ஒன்றாயிருக்கும் மக்கட் சமுதாயம் ஜாதியால் பிரிக்கப்பட்டதாய் காணப்படுகிறது. இது ஒரு பக்கம் இருக்க திருநங்கைகள் நம் நாட்டில் இழிவான இடத்தை வகித்து "சக்தி யற்றவர்களாக” காணப்படுகின்றனர். பல இடங்களில் இவர்களை ஏற்காமல் தொழில் செய்ய மறுக்கப்பட்டு திருட்டு, பாலியல் தொழில் என அருவருப்பானவைகளை செய்ய வைக்கிறது நம் தேசம். இதற்காக நீயும் நானும் கணக்கு ஒப்புவிக்க வேண்டுமல்லவா!! இவர்களின் மறுமலர்ச்சி உன் ஜெபத்தில் தான் மறைந்திருக்கிறது.

வாழ்க்கையை ‘‘காதல்’’ என்னும் மோகத்தில் தொலைத்துவிட்டு குற்ற உணர்வோடு இருக்கும் ஒரு கூட்டத்தினர் தாலாட்டி வளர்த்த பிள்ளைகள் கைவிட்டதால் கேட்பாரற்று அலையும் பெற்றோர்கள் முதியோர் இல்லத்தில் இருப்பவர்கள், பணம், நிலம் என கயவர்களிடம் ஏமாந்து கடன் சுமையால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் மக்கள் தங்களை ‘‘சக்தியற்றவர்களாக’’ தான் கருதுகின்றனர். இவர்களின் விடுதலை மற்றும் மறுவாழ்வு உன் ஜெபத்தில் இருக்கிறது என்பதை மறந்துவிடாதே.

அநேக மாற்றுதிறனாளிகள் கண் பார்வையற்றோர், கால் முடமானோர், காது கேளாதோர், ஊமையானவர்களும் கூட இச்சமயத்தில் சக்தியற்றவர்களாக தங்களை தாங்களே கருதுகின்றனர். இவர்கள் இம்மனநிலையிலிருந்து வெளிவர நாம் முழங்காற்படியிடுவோம். அகிலத்தை படைத்த ஆண்டவர் இப்படிப்பட்டவர்களைதான் தம்முடைய ஊழிய நாட்களில் தேடிச் சென்று சுகமாக்கினார்.

**ஜெபக்குறிப்புகள்:**

1. நம் தேசத்தில் அதிக முதியோர் இல்லங்கள்(278) கொண்ட மாநில மாக கேரளா அமைந்துள்ளது. அங்குள்ள முதியோர்களை தேவன் திடப்படுத்த அவர்களை சந்தோஷத்தாலும் சுகத்தாலும் நிரப்ப ஜெபிப்போம்.
2. 2021ல் எடுத்த அறிக்கைப்படி நம் தேசத்தில் 26.8 மில்லியன் மக்கள் மாற்றுத்திறனாளிகளாய் உள்ளனர். இவர்களை தேவன் பாதுகாக்க, நல்ல வேலைகள் பெற, மக்களிடம் தயவு பெற ஜெபிப்போம்.
3. 2019ல் 4.5% மக்கள் காதல் தோல்வியால் தற்கொலை செய்துக்கொண்டுள்ளனர். 1,39,123 பேர்களில் இவற்றால் பாதிக்கப்பட்டுள்ளவர்களை தேவன் சந்திக்க, இவர்கள் எதிர்கால வாழ்க்கையில் நம்பிக்கையுள்ளவர்களாய் எதிர்நீச்சல் போட ஜெபிப்போம்.
4. 2021 வரைக்கும் 4.8 மில்லியன் மக்கள் நம் தேசத்தில் திருநங்கைகளாய் உள்ளனர். இவர்களை பரமன் இயேசு இரட்சிக்க சமுதாயம் இவர்களை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.
5. மனைவியை மதிக்காமல், அடிப்படை உரிமைகளைக் கூட அளிக்காமல் வீட்டின் வேலைக்காரிகளாக கருதப்பட்டு சக்தியற்றவர்களாக எண்ணிக்கொண்டிருப்பவர்களுக்கு இரட்சிப்பைத் தர மன்றாடுவோம்.
6. கடன் பிரச்சனைகளில் மூழ்கிப்போய் இனி நம்மால் முடியாது சக்தியில்லை தற்கொலை தான் முடிவு என்னும் எண்ணத்திற்கு வருவதற்குள் தேவன் இப்படிப்பட்ட மக்களை இவ்வடிமைத்தனத்தி லிருந்து மீட்க ஜெபிப்போம்.
7. மதுக்கு அடிமையாகி சில பாவ பழக்கங்களிலிருந்து வெளிவர முடியாமல் சக்தியற்றவர்களாக தங்களையே அடையாளப்படுத்திக்கொள்ளும் மாந்தருக்கு தேவன் இரட்சகராய் மாற ஜெபிப்போம். ஆமென்.

Mrs. Jeba Tyson

# LUNG CANCER Awareness Day

# நுரையீரல் புற்றுநோய் தினம்



உலகில் பரவலாகக் காணப்படும் புற்றுநோய் வகைகளில் முக்கியமான ஒன்றாக நுரையீரல் புற்றுநோய் உள்ளது. இது இந்தியாவின் புற்றுநோய் நிறுவனத்தால் பெரிதும் கணக்கிடப்படாத ஒன்றாக இருந்தாலும் வருடந்தோறும் அநேக உயிர்களை பலியாக்கிக் கொண்டிருக்கிறது. உலகம் முழுவதும் கிட்டத்தட்ட 90% நுரையீரல் புற்றுநோய் மரணங்கள் புகைப்பிடித்தலின் காரணமாகவே ஏற்படுகின்றன. உலக சுகாதார அமைப்பின் கருத்துப்படி 5 ல் 1 நபர் நுரையீரல் புற்றுநோய் காரணமாக உள்ளார் . நீண்ட காலமாக புகைப் பிடிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கு இதனால் ஏற்படும் அபாயம் மிக அதிகம். புகை பிடிக்கும் ஆண்களில் இந்நோய் ஏற்படும் வாய்ப்பு 11.6 சதவீதம ாகவும், புகைப்பிடிக்காதவர்களுக்கு இது குறைவாகவும் உள்ளது. புகைப்பிடித்தல், பிறர் வெளியேற்றும் புகையிலை புகையை சுவாசிப்பது, போதை வஸ்துகள் உள்ளிட்டவைகளை பயன்படுத்துவது, வாகனங்கள் தொழிற்சாலைகள் போன்றவற்றால் ஏற்படுகின்ற காற்று மாசுபாடு, வேதியியல் வெளிப்பாடுகளான ஆஸ்பெஸ்டாஸ் அல்லது ரேடன் காச நோய், நாள்பட்ட நுரையீரல் நோய்கள் போன்ற காரணங்களால் அதிகளவில் நுரையீரல் புற்றுநோய் ஏற்படுவதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். 10-15% வரையிலான நோயாளிகளே புகைப்பிடிக்காதவர்களாக இருக்கின்றனர்.

நுரையீரல் புற்றுநோய்க்கான காரணங்கள் மற்றும் சிகிச்சை முறைகள் குறித்தும் அதன் தாக்கம் குறித்தும் அதின் அபாயங்கள் குறித்து அறிந்துகொள்வதற்காகவும் உலகம் முழுவதும் அதற்கான ஆரம்ப கால சிகிச்சைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆகஸ்ட் 1 ஆம் தேதி நுரையீரல் புற்றுநோய் தினமாக அனுசரிக்கப்படுகின்றது.

## ஜெபக்குறிப்புகள்:

1. ஒரு நாளைக்கு ஒரு பாக்கெட் சிகரெட் பிடிப்பவர்களுக்கு 20-25 மடங்கு நுரையீரல் புற்றுநோய் வரும் வாய்ப்பு அதிகம். சிகரெட்டில் 4000க்கும் மேற்பட்ட ரசாயணங்கள் கலக்கபட்டுள்ளதால் அதன் அபாயத்தை உணர்ந்து சிகரெட் பழக்கத்தை மக்கள் கைவிட ஜெபிப்போம்.
2. புகைப்பிடிக்காதவராக இருந்தாலும் கூட புகைப்பிடிப்பவரின் உடன் இருந்தால் அந்த புகையை சுவாசிக்கும் நபருக்கும் புற்றுநோய் ஏற்படும் அபாயம் உள்ளதால் மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க ஜெபிப்போம்.
3. உணவகங்கள் மற்றும் பணியிடங்கள் போன்ற பொது இடங்களில் புகைப்பிடித்தலை குறைப்பதற்காக தடை செய்யும் கொள்கை பல மேற்கத்திய நாடுகளில் மிகவும் பொதுவானதாக இருக்கிறது. இது மக்களால் சரியான முறையில் கடைப்பிடிக்கப்பட ஜெபிப்போம்.
4. 2007 ஆம் ஆண்டில் இந்தியாவின் முதல் புகையில்லாத மாநிலமாக சண்டிகர் மாறியது. இதை போல அனைத்து மாநிலங்களும் மாற ஜெபிப்போம்.
5. இந்தியாவிலும் 2008 ஆம் ஆண்டு முதல் பொது இடங்களில் புகைப்பிடிப்பதற்கு முழுமையான தடை அமலுக்கு வந்தது. இப்பபடிப்பட்ட சட்டங்களை மீறாமல் மக்கள் கடைப்பிடிக்க ஜெபிப்போம்.
6. இளைஞர்கள் புகைப்பிடிப்பதை தடுப்பதற்காக அரசாங்கம் புகையிலை விளம்பரங்களை முழுவதுமாக தடை செய்ய வேண்டும் என உலக சுகாதார நிறுவனம் அழைப்பு விடுத்தி ருக்கிறது. அரசாங்கம் இதை பின்பற்ற ஜெபிப்போம்.
7. புற்றுநோய் பொறுத்தவரை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உரிய சிகிச்சை அளிப்பதன் மூலம் முற்றிலும ாக குணப்படுத்த முடியும். அதனால் அறிகுறிகள் இருந்தால் மக்கள் தைரியமாக சிகிச்சைகளை பெற்றுக் கொள்ள, விழிப்புணர்வு பெருக ஜெபிப்போம்.
8. நுரையீரல் புற்றுநோய் ஆபத்து காரணங்களை பற்றி அதிக விழிப்புணர்வு ஏற்படவும் இப்படி விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு புகையிலை மற்றும் புகையிலை பொருட்கள் முற்றிலுமாக கட்டுப்படுத்தப்படவும் ஜெபிப்போம்.
9. நுரையீரல் புற்றுநோய் வந்தவர்களுக்கு இன்றளவும் முறையான சிகிச்சை முறைகள் இல்லை. மருத்துவத் துறை இதன் சிகிச்சை முறையின் முன்னேற்றத்திற்காக உழைக்க ஜெபிப்போம்.
10. “நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” என்பதற்கேற்ப மக்களின் பழக்கவழக்கங்களில் நல்ல மாற்றம் ஏற்படவும், நோயில்லாமல் மக்கள் வாழவும் ஜெபிப்போம்.

- Mrs. Steffi



# சகோ.பாக்கியநாதராஜ் (1941-1990)

கன்னியாகுமரி மாவடத்தில் குமாரபுரம் தோப்பூரில் உள் ள ஒரு கிறிஸ்துவக்குடும்பத்தில் 1941ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ம் தேதி பிறந்தார். அவருடைய தந்தை திரு. ஜியார்ஜ், தலைமை எழுத்தாளராக கண்ணன்தேவன் தேயிலைக் கம்பெனியில் பணியாற்றி வந்தார், தாயார் திருமதி. கனகம்மாள் இல்லத்தரசி. இவருடன் பிறந்தவர்கள், குளோரியா சிரோன்மணி, ஜாய் செலின் சரோஜா என்ற இருமூத்த சகோதரிகளும், அருமைதங்கராஜ், டேவிட் செல்வராஜ் என்ற இரு இளைய சகோதரர்களும் ஆவர்.

## இளமைப்பருவம்:

ஆலயத்திற்கு ஒழுங்காக செல்வது, வேதம் வாசித்து, ஜெபிப்பது போன்ற காரியங்களில் தேர்ச்சி பெற்றிருந்தார். சகோ. பாக்கியநாதராஜ் தன்னுடைய பள்ளி இறுதி வகுப்பை முடித்தப் பின், இயந்திரவியல் தொழில்கல்விக்கற்றார். 1956ம் ஆண்டு அவர்களுடைய ஆலயத்தில் நடந்த ஒரு ஆவிக்குரியக் கூடுகையின் போது தேவனுடைய செய்தியைக் கேட்டு மனந்திரும்பி கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். சிறுவயதிலேயே அவருடைய தந்தை மரித்து விட்டார்.

## திருமண வாழ்கை

ஊட்டியில் உள்ள இந்துஸ்தான் போட்டா பிலிம் கம்பெனியில் வேலை கிடைத்து அங்கு 12 ஆண்டுகள் பணியாற்றி வேலையில் உயர்வைப் பெற்றார். சகோ. பாக்கியநாதராஜ் சகோதரி. ஜாய்ஸ் என்பவரை 1971ம் ஆண்டு மே மாதம் 12ம் தேதி திருமணம் செய்தார். திருமதி. ஜாய்ஸ் அரசாங்க மருத்துவமனையில் மருந்து கொடுப்பவராக பணியாற்றிவந்தார். 1948ம் ஆண்டு அக்டோபர் 19ம் தேதி பிறந்தார். தனது 15வது வயதில் விடுமுறை வேதாகப்பள்ளியின் வழியாக இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். திருமணத்திற்குப் பின் குடும்பமாக அவர்கள் ஊட்டியில் வாழ்ந்து வந்தனர். தேவன் இவர்கள் குடும்ப வாழ்வை ஆசீர்வதித்து கோல்டன்ஜெபஜியார்ஜ் மற்றும் கோல்டன் விக்டர்ஜியார்ஜ் என்ற இரண்டு மகன்களைக் கொடுத்தார்.

## ஊழியத்திற்கு அழைப்பு

கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டது முதல் கிறிஸ்துவில் வளர்ந்து வந்த சகோ. பாக்கியநாதராஜ் ஊழியத்திலும் அதிக வாஞ்சை கொண்டு தன்னால் முடிந்த பணியைச் செய்து வந்தார். மட்டுமல்லாது தேசத்தில் நடைபெறும். ஊழியங்களுக்காக ஜெபித்தும் வந்தார். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் வட இந்திய ஊழியங்களைப் பற்றி அறிந்து இந்தக் குடும்பம் மிஷனெரிகளுக்காக ஜெபிக்க கொடுக்க ஆரம்பித்தனர். பாளையங்கோட்டையில் நடைபெற்ற மிஷனெரிக் கூடுகையில் பங்கு பெற விரும்பினார். சகோ. பாக்கியநாதராஜ் அவர்களுடைய மனைவி அனுப்ப மறுத்தார்கள். ஆனால் அவர் சென்று விட்டார். அன்று இரவு தேவன் ஒரு கனவின் மூலம் திருமதி. ஜாய்ஸ் அவர்களுடன் இடைபட்டார். இன்று இரவே உன்னுடைய கணவனை நான் எடுத்துக் கொண்டால் நீ என்ன செய்வாய், ஏன் உனக்கு இவ்வளவு கோபம் என பேசினார். அன்றிரவே கர்த்தரிடம் மன்னிப்புக்கேட்டார். 2 நாளைக்குப் பின் தன் கணவர் கூடுகை முடிந்து வீடு வந்ததும் அவரிடமும் மன்னிப்புக் கேட்டார். மிஷனெரிகள் வட இந்திய தேவைகளை, மற்றும் ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொள்ளும் போது சகோ. பாக்கியநாதராஜ் அதிகமாக தொடப்பட்டு தாங்களும் ஒரு மிஷனெரியாக செல்ல வேண்டும் என தீர்மானித்தார்கள். திருமதி. ஜாய்ஸ் அவர்கள் பங்கு பெற்ற பெண்கள் கூடுகையின் போது தேவன் ஆதி 28: 15ஆம் வசனத்தின் மூலம் ஊழியத்திற்கு அவர்களை அழைத்தார். “நீ போ உன்னோடு கூட நான் இருப்பேன்” என உறுதிசெய்தபடியால் தேவ ஊழியத்திற்கு தயாராக இருந்தார். குடும்பமாக ஜெபிக்கும்போது, கர்த்தர் 91ஆம் சங்கீதத்தின் வாயிலாக அவர்களுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தைக் கொண்டு தங்கள் பணிகளை இராஜினாமா செய்து விட்டு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மிஷனெரிப் பணியில் ஊழியர்களாக 1980ம் ஆண்டு 25ம் தேதி ஜனவரி மாதம் இணைந்தனர்.

## வட இந்திய மிஷனெரிப் பணியில்:

1980ல் முழு நேரப் பணியாளராக நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் இணைந்த இவர் ஊழியப்பயிற்சிக்காக சேலம், டேனிஷ்பேட்டையில் உள்ள பெத்தேல் வேதாகம நிலையத்திற்கு அனுப்பப்பட்டார். அங்கு இறையியல் பயிற்சியை ஓராண்டில் முடித்து குஜராத்திற்கு மிஷனெரியாக அனுப்பப்பட்டார். வியாரா வந்து அதன் பின்னர் வகைய் என்ற கிராமத்திற்குச் சென்று, விடுமுறைக்காக சென்றிருந்த மிஷனெரி சகோ. ஜான்சன் பர்னபாஸ் அவர்கள் வீட்டில் தங்கியிருந்து ஊழியத்தை ஆரம்பித்தார்கள். அந்த மக்கள் பேசும் குக்னா மொழியைக் கற்று அந்த மொழியில் சுவிசேஷத்தை பகிர்ந்து அநேகரை கிறிஸ்துவுக்குள் வழி நடத்தினார்கள். பிப்பள்வாடாவில் சிலகாலமும், பின்னர் உச்சல் பணித்தளத்தை மையமாக கொண்டு பணி செய்தார்கள்.

பர்டிபாடா என்ற கிராமத்தின் ஆரம்பக் கால ஊழியத்தில் மந்திரவாதி ஒருவன் தன்னிடம் சுகம்பெற வந்த வாலிபன் வயிற்றில் இரும்பு கம்பியை நன்றாக பழுக்க காய்ச்சி அதை அவனுடைய வயிற்றில் வைத்து ஒரு சூடு போட்டான். இந்த வலியில் அவனுக்கு வயிற்று வலி மறந்து விட்டது. இதைக் கண்டதும் அங்கு கூடியிருந்த மக்களிடம் இவனுடைய சுகத்திற்காக நாங்கள் இறைவனிடம் மன்றாடுகிறோம், அவரே விடுதலை தருவார், தர முடியும் எனக் கூறி, அவர்கள்

மொழி தெரியாததால் தமிழில் உருக்கமாக ஜெபித்து அனுப்பினார்கள். சில நாட்கள் கழித்து சிலர் வந்து மிஷனெரிகள் ஜெபித்த வாலிபன் நல்ல சுகம் பெற்றுள்ளான் என்றனர்.

கரஞ்கேடு என் ற கிராமத்தில் வெகு சிலரே ஆண்டவரை ஏற்றுக்கொண்டிருந்தனர். விசுவாசிகளின் குடும்பத்தில் ஒரு சிறு குழந்தை இரத்த வாந்தி மற்றும் பேதியினால் மரித்துப் போய்விட்டது. கிராமத்தார் நீங்கள் புலி மற்றும் பாம்பு தெய்வத்தை விட்டுவிட்டதால் குழந்தை மரித்தது. எனவே மறுபடியும் அந்த தெய்வங்களை வணங்க வற்புறுத்தினார்கள். ஆனால் விசுவாசிகளோ அதற்கு இசையவில்லை, மாறாக லாசருவை மரித்தப்பின் உயிரோடு எழும்பச்செய்த கர்த்தர் எங்களுக்கும் உதவி செய்வார் என அனைத்து விசுவாசிகளும் இரவு முழுவதும் தூங்காமல் ஜெபிக்க ஆரம்பித்தனர். பரிகாசம் செய்த மக்கள் வியக்கும்படியாக தேவன் ஒரு அற்புதம் செய் து குழந்தைக்கு உயிர் கொடுத்தார். இப்படி தேவன் செய்த அற்புதங்களினால் 6 மாத காலத்தில் 128 பேர் திருமுழுக்குப் பெற்று தேவனுடைய மந்தையில் சேர்ந்தனர்.

திரு. பாக்கியநாதராஜ் குடும்பம் 1985ம் ஆண்டு டாங்ஸ் மாவட்டத்தில் இருந்து மாற்றப்பட்டு சூரத் மாவட்டத்தில் உள்ள உச்சல் என்ற பகுதிக்கு வந்து ஊழியத்தைத் தொடர் ந்தார்கள். 1988ஆம் ஆண்டு மஹாராஷ்டிரா மாநிலம், தூலே மாவட்டத்திலுள்ள நவகாம் என்ற கிராமத்தில் 29ஆம் தேதி ஏப்ரல் மாதம் ஒரு மேளாவிற்கு ஆயத்தம் செய்யப்பட்டு. பலநூறுவிசுவாசிகள் அந்த பகுதியில் ஊழியம் செய்து வந்த மிஷனெரிகள் சிறப்பு செய்தியாளர் திரு. சூரியவம்சி மற்றும் பொதுச்செயலாளர் திரு. பேட்ரிக் ஜாஷ்வா போன்றோர் கூடியிருந்தனர். கூட்டம் நடந்து கொண்டிருக்கும் போது கிறிஸ்தவ எதிர்ப்பாளர்கள் கற்களை வீசி கலவரத்தை ஏற்படுத்தினார் கள். அதில் சுதேச ஊழியர், மிஷனெரிகள் மற்றும் விசுவாசிகள் காயப்பட்டனர். அதோடு விட்டு விடாமல் பந்தலுக்கு தீவைத்தனர். உடனே நமது ஊழியர்கள் விருந்தினர்களாகிய திரு.சூரியவம்சி மற்றும் பொதுச் செயலாளர் திரு.பேட்ரிக் ஜாஷ்வா போன்றோரை ஒரு வீட்டில் வைத்து கதவை தாழிட்டு திருமதி. ஜாய்ஸ் பாக்கியநாதராஜ் யாரையும் உள்ளேவிடாமல் பார்த்துக் கொண்டார். கலவரக்காரர்கள் முயற்சி செய்தும் அவர்களை அனுமதிக்கவில்லை. 9 பேரை கம்பத்தில் கட்டி வைத்து அடித்தார்கள். அதில் பலமாக தாக்கப்பட்டவர் திரு பாக்கியநாதராஜ் ஆகும். எங்கள் ஊரில் ஆலயம் கட்டி தீட்டுப்படுத்திவிட்டீர்கள் என கூறி வாயில் செருப்பால் அவரை அடித்து உதைத்தார்கள். விருந்தாளிகளை அழைத்து செல்ல வந்த வாகன ஓட்டுனர், பந்தல் தீப்பற்றி எரிந்து கொண்டிருப்பதைக் கண்டு நேராக நவகாம் காவல் நிலையம் சென்று இருகாவலர்களை அழைத்து வந்து அனைவரையும் காப்பாற்றினார் . இவ்வாறு கடினமாக பணி செய்ததின் விளைவாக பல நூறு விசுவாசிகள் அந்தப் பகுதியில் எழும்பி திருச்சபைகளாக மலர்ந்தன.

## இறுதி நாட்கள்

கிறிஸ்தவ எதிர்ப்பாளர்களால் தாக்கப்பட்ட திரு. பாக்கியநாதராஜ் சிகிச்சை பெற்றார். அவருடைய பல உள்உறுப்புக்கள் அந்த வீரிய தாக்கத்தால் பாதிக்கப்பட்டிருந்தது . 1989ம் ஆண்டு முதல் இருதய வீக்கத்தால் அவதியுற்று வந்தார். 1989 நவம்பர் 4ம் தேதி திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்தார். உடல் மிகவும் பலவீனமாக இருந்து வந்தது. தன்னுடைய சொந்த ஊரான தோப்பூரில் ஓய்வெடுத்து வந்த நாட்களில் 1990 மே மாதம் 12ம் தேதி தன்னுடைய திருமணநாள் அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அதன் பின்பு திருமதி ஜாய்ஸ் பாக்கியநாதராஜ் மறுபடியும் நவாகாம் பகுதிக்கு சென்ற போது, சகோ. பாக்கியநாதராஜ் அவர்களை அடித்து துன்புறுத்திய மனிதர்கள் பல பாடுகள் வழியாக கர்த்தரை அறிந்தனர். திருமதி. ஜாய்ஸ் அவர்களிடம் அடித்தவன் வந்து மன்னிப்பும் கேட்டான். இன்றைய நாளில் இங்கு ஒரு ஆலயம் கட்டப்பட்டு அநேகர் தேவனை ஆராதித்து வருகிறார்கள்.

இளையமகன்விக்டர்பெத்தேல்வளாகத்தில்ஒருநாள்இரவு சுற்றுசுவர்கட்டப்படாததரையோடிருந்தஒருகிணற்றில், போதியவெளிச்சம்இல்லாதபடியால்தவறிவிழுந்துவிட்டான்.பின்புஅவனுடையமுனங்கல்சத்தம்கேட்டசிலர்மற்றவர்களின் உதவியோடு கிணற்றில் இறங்கி அவனை வெளியே தூக்கினார்கள். ஆனால் அவனைக் காப்பாற்ற முடியவில்லை. தன் தகப்பன் சென் றிருந்த தேவராஜ்ஜியத்திற்கு அவனும் சென்று விட்டான். இந்த இழப்பு அந்தக் குடும்பத்திற்கு மட்டுமல்ல, இயக்கத்தின் அனைத்து குடும்பத்திற்கும் பேரிழப்பாக இருந்தது.

கணவன் விட்டுச் சென்ற ஊழியத்தை தொடர்ந்து செய்ய தேவையான கிருபைகளை தேவன் திருமதி ஜாய்ஸ் அவர்களுக்குக் கொடுத்தார். தன்னுடைய படிப்பை முடித்த மூத்த மகன் ஜேம்ஸ் ஊழியத்தில் பணியாற்றி வந்தான். 1996ம் ஆண்டு ஜனவரி 26ம் தேதி கன்னிமடத்தைச் சேர்ந்த லில்லிராணி என்ற பெண்ணோடு திருமணம் நடந்தது தேவன் இவர்களது திருமண வாழ்வை ஆசீர்வதித்து பிளச்சோ ஜோன் என்ற மகனைக்கொடுத்து ஆசீர்வதித்தார். அவர்கள் மும்பை குடிசை வாழ் மக்களின் தெரு பிள்ளைகள் மத்தியில் ஊழியம் செய்து வந்த திரு. ஜாண் ஆபிரகாம் அவர்களுடன் இணைந்து ஊழியத்தை செய்து வந்தார்கள்.

கர்த்தர் சிலரை பாடுகள் வழியாக நடந்து சென்று தன் ஊழியத்தை நிறைவேற்ற அழைத்திருக்கிறார். 2001 ஆம் ஆண்டு அக்டோபர் 13ஆம் தேதி கேத்திபாடாவில் உள்ள தமிழ் மெதடிஸ்ட் ஆலயத்தை சுத்தம் செய்து கொண்டிருக்கும் போது கோல்டன் மின்சாரம் தாக்கி மரித்துப் போனான். இந்த செய்தி திருமதி ஜாய் ஸ் மற்றும் ம னைவி ராணியை பெரிதும் தாக்கியது. இப்படித் தன் குடும்பத்தினரை தேவ ஊழியத்தில் இழந்தாலும் கடைசி மூச்சு வரை தேவனுடைய பணி யை செய்வேன் என்று திருமதி ஜாய்ஸ் தன்னால் இயன்ற பணிகளை முன்னேற்றப் பணியில் செய்து 65 வது வயதில் பணி ஓய்வு பெற்றப்பின்பும், ஜெபக்குழுக்களை சந்தித்து உற்சாகப்படுத்தும் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

கிறிஸ்துவுக்காக தன் அரசாங்க வேலையை உதறிவிட்டு, துடிப்போடு பணி செய்து எதிர்ப்பாளர்களிடம் அடிபட்டு, அதன் மூலம் சுகவீனப்பட்டு மரித்த பாக்கியநாதராஜ் அண்ணனை போலவும், இளவயதில் தன் கணவரையும், பின்னர் தன் இரண்டு பிள்ளைகளையும் இழந்த போதிலும் கடைசி மூச்சு உள்ள வரை ஆண்டவருக்காக பணி செய்வேன் என்று சொல்லி இன்றும் ஊழியம் செய்து வரும் சகோதரி. ஜாய்ஸ் அவர்களைபோலவும் அர்ப்பணிக்க நாம் முன்வருவோமா? இம்மாத தலைப்பான ஊழியம் மற்றும் சுவிசேஷம் அறிவிப்பு என்ற தலைப்பில் நம்முடைய பங்குதான் என்ன? சிந்திப்போம். தேவனுக்காய் புறப்படுவோம்.

- Maraka Mudiya Mamanithargal Vol -II



# அழிந்துபோகும் ஆத்துமாக்கள் மீது அன்புகூருவது

## மிஷனெரிப்பணியின் அடிப்படை தேவை

வேதம் நமக்கு கற்றுத் தருவதெல்லாம் மிஷனெரிப்பணியும், ஆத்தும ஆதாயமும் ஆகும். நாம் விரும்பினால் மட்டும் செய்யும் பணியல்ல. அது நம்மேல் விழுந்த கடமை. எனவே அனைத்து கிறிஸ்தவர்களும் ஆத்தும ஆதாயம் செய்பவர்களாயிருக்கவேண்டும்.

எண்ணாகமம் 16:48இல் குறிப்பிடப்பட்டிருப்பது, மோசே செத்தவர்களுக்கும் உயிரோடிருக்கிறவர்களுக்கும் நடுவே நின்றான். அப்பொழுது வாதை நிறுத்தப்பட்டது. அப் 20:31இல் பவுல் குறிப்பிடுகிறார். ஆனபடியால் நான் மூன்று வருஷகாலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்தி சொல்லிக்கொண்டு வந்ததை நினைத்து விழித்திருங்கள். எனவே கிறிஸ்துவுக்காக ஆத்தும ஆதாயம் செய்வது, இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவ விசுவாசிக்கும் கொடுக்கப்பட்ட கடமையும் பொறுப்புமாகும்.

### 1. ஆத்துமாக்களை நேசிப்பதின் முக்கியத்துவம் :

★ ஆத்துமாக்களை நேசிப்பது என்பது கிறிஸ்துவின் பண்பைப்போல மிக முக்கியமான அடிப்படைத்தன்மை யாகும். ஆத்துமாக்களின் மீது அன்பு செலுத்தாதவர்கள், கிறிஸ்துவை விரும்பாதவர்களாக இருப்பார்கள்.

★ ஏனென்றால் ஆத்துமாக்களின் மீதான அன்பு மற்றவர்களை இரட்சிப்பின் பாதையில் நடத்த நம்மை செயல்படவைக்கும்.

★ ஏனென்றால் ஆத்துமாக்களின் மீது அன்பு செலுத்தாதவர்கள், கடின இருதயமுடையவர்களாயிருப்பர் அல்லது மன்னிக்க முடியாத அறியாமை உடையவர்களாவர்.

### 2. கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளை வாழ்வில் கடைபிடியுங்கள்

★ அழியும் ஆத்துமாக்களின் இரட்சிப்பில் ஆழமான கரிசனை உள்ளவர்களாக இருங்கள்.

★ அவர்களின் இரட்சிப்புக்கான முயற்சியில் ஆர்வமுள்ளவர்களாயிருங்கள்.

★ யாராவது ஒருவருக்கு நற்செய்தியை சொல்லும்படியான தருணத்தை எப்பொழுதும் எதிர்பார்த்துக் கொண்டிருங்கள்.

★ வெளியில் சென்று ஆர்வமுள்ள மக்களை தேடுங்கள்.

★ இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்களினால் தேவன் அடையும் சந்தோஷத்தை அனுபவியுங்கள்.

★ மற்றவர்கள் இரட்சிக்கப்பட தியாகத்திற்காக ஆயத்தமாயிருங்கள்.

★ இன்னும் இரட்சிக்கப்பட வேண்டியவர்களுக்காக தினமும் ஜெபம் செய்யுங்கள்.

### 3.அழிந்து போகும் ஆத்துமாக்களுக்காக கரிசனையை வளர்த்திடுங்கள்.

ஆத்துமாக்களின் மீது அன்பு செலுத்துவது பரிசுத்த ஆவியானவரின் வேலையாகும் என்பதை நாம் அறிந்திருக்கவேண்டும். இதை தெளிவாக பார்க்கும்படியாக நாம் உருவாக்கப்பட்டிருக்கிறோம் என்றும் மற்றும் நமது ஆத்துமாவின் ஆழத்தில் இதை உணர வேண்டும் என்றும் நான் வேண்டுகிறேன். பரிசுத்த ஆவியினால் மட்டுமே உங்களுக்கு இந்த மகிமையான கிருபையில் பங்களிக்க முடியும் என்பதை ஆழமாக உணருங்கள்.

### 4. ஆத்தும ஆதாயத்திற்கான கரிசனை எப்படி பெற்றுக்கொள்வது?

நாம் அழியும் ஆத்துமாவின் மீது உண்மையான அன்பும், மிகுந்த கரிசனையும் கொண்டிருக்கும்போது, ஜெபம். (லூக்கா 11:13) கருத்தான ஜெபம், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையான செயல்பாடு, இவைகளின் மூலம் அவரே கிரியைசெய்கிறார்.

★ ஆவியானவர் எங்கு உண்டோ அங்கு விடுதலை உண்டு (2கொரி 3:17).

★ ஆண்டவருக்கு நாம் கீழ்படியும்போது ஆவியானவரும் அதிக அளவில் கிரியைசெய்கிறார்.

**5. ஏன் ஆத்தும ஆதாயம் செய்யவேண்டும்? :**

ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன் (நீதி11:30). ஒவ்வொரு அறிவுள்ள மனிதனும் ஆத்தும ஆதாயம் செய்வதை தனது வாழ்க்கையின் குறிக்கோளாக கொண்டிருக்கிறான்.

★ ஏனென்றால் கிறிஸ்துவால் நமக்கு கொடுக்கப்பட்டுள்ள வேலையே இதுதான். மத்தேயு28:19, மாற்கு 16:15. இதுவே கிறிஸ்து தனது சீஷர்களுக்கு இட்ட இறுதிக் கட்டளையாகும். அவர்களுக்கு மட்டுமல்ல, ஒவ்வொரு விசுவாசிக்கும், ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது.

★ ஏனென்றால் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையின் பிரதான நோக்கத்தின் செயல்பாடாகும். மேலும் அவரைப் பின்பற்றுகிறவர்களாகிய நமது வாழ்க்கையின் நோக்கமும் இதுவாகவே இருக்கவேண்டும் (லூக்கா 19:10). ஆத்தும ஆதாயம் செய்யாதவர்கள் யாராயிருந்தாலும் தான் கிறிஸ்துவை பின்பற்றுகிறவன் என்று சொல்ல தகுதி கிடையாது.

★ ஏனென்றால் "உன்னோடே இருப்பேன்" என்ற கிறிஸ்துவின் தனிப்பட்ட பிரசன்னத்தையும், அதனால் கிடைக்கும் அனைத்து ஆசீர்வாதத்தையும் நாம் அனுபவிக்கலாம். மத்28:;20 நாம் அவர் வழியில் செல்லும் பொழுது அவர் நம் காரியங்களை வாய்க்கச்செய்கிறார். நாம் அவரோடு செல்லும் பொழுது அவர் நம்மோடு வருகிறார்.

★ ஏனென்றால் இது பரிசுத்த ஆவியின் செயல்பாடாகும். அப் 1:8 பரிசுத்த ஆவியின் வரங்கள், விசேஷமான செயல் நோக்கத்திற்காகவும் மேலும் விசேஷமான இலக்கை நிறைவேற்ற கொடுக்கப்பட்டதாகும். நமது சொந்த ஆசீர்வாதத்திற்காகவும், சந்தோஷத்திற்காகவும் மட்டுமல்லாமல் நாம் சாட்சிகளாக இருந்து ஆத்தும ஆதாயம் செய்வதற்கான வல்லமையை பெற்றுக்கொள்வதற்காக கொடுக்கப்பட்டதாகும்.

★ ஏனென்றால் தனிநபரை, குடும்பங்களை, மற்றும் சமுதாயத்தை மறுமலர்ச்சிப் பெறச்செய்கிறது. (2கொரி 5:17, கொலோ 1:6)

★ சுவிசேஷம் கனிகளைக் கொடுத்து, முழு உலகத்திற்கும் ஆவிக்குரிய வளர்ச்சி தருகிறது.

☞ ஆதாயம் செய்யப்பட்ட ஆத்துமாவின் மதிப்பானது இந்த உலகத்தை காட்டிலும் மேலானது. (மாற் 8:36)

☞ ஒரு ஆத்துமா நித்திய அழிவிலிருந்து பாதுகாக்கப்படுகிறது.

☞ இரட்சிக்கப்பட்ட ஆத்துமாவிற்கு கிடைப்பது சந்தோஷம், பரிசுத்தம், மகிமை, ஐக்கியம் மற்றும் தேவ சாயல்.

★ ஏனென்றால் ஆத்தும ஆதாயம் ஆண்டவர் தரும் மிகப்பெரிய வெகுமதியையும் மற்றும் கனத்தையும் பெற்றுத் தருகிறது.(யோ 4:36, தானியேல் 12:3)

**முடிவுரை** : உங்கள் வாழ்க்கையில் ஆத்தும ஆதாயம் செய்வதை மிகப்பெரிய பணியாகவும், நோக்கமாகவும் கொண்டுள்ளீர்களா? நம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து இந்த ஆத்தும ஆதாயம் செய்வதையே என் தொழிலாகக் கொள்வேன், இதுவே என் வாழ்வின் பிரதான இலட்சியம் இந்த நோக்கத்திற்காக நான் வாழ்வேன் என தைரியமாக கூறுவீர்களா?. இழந்து போனதை தேடவும் இரட்சிக்கவுமே நான் வாழுவேன். தேவன் எனக்கு கொடுத்த புனிதமான வாழ்வில் ஆர்வமுடனும் மற்றும் இடைவிடாத ஜெபத்தினாலும், செயல்பாட்டினாலும் அழிந்து போகிறவர்களை இரட்சிக்க என்னை அர்ப்பணம் செய்கிறேன் என ஒப்புக்கொடுப்பீர்களா?

Rev. E. Rajan





# விடுதலைக்குள் அடிமைத்தனம்

பத்தாம் வகுப்புப் படிக்கும் மாணவன் ஒருவன் தன் வகுப்பு நண்பனுக்கு இரண்டாயிரம் ரூபாயைக் கடனாகக் கொடுத்தான். கடனைப் பெற்ற அம்மாணவன், பணத்தைத் திரும்பக் கேட்டதற்காக கொடுத்தவனைக் கடுமையாகத் தாக்கினான். சில நாட்கள் கழித்து அவனைக் கொன்றும் விட்டான். கன்னமிட்டுத் திருடுவது முதல் கொலை செய்வது வரை எல்லாவற்றையும் செய்யும் கும்பல்களில் இளைஞர்களும் ஈடுபடுகிறார்கள். இதுவரை நாங்கள் கண்ட வழக்குகளில் இவ்வகையான குற்றச் செயல்களை இளைஞர்கள் புரிவதற்குப் பணமே முக்கியமான நோக்கமாக இருந்திருக்கிறது. அவர்களை விசாரித்த போது உயர் ரக உடைகள் அல்லது கடிகாரம் வாங்குவதற்கோ அல்லது சொகுசுத் திரையரங்குகளில் திரைப் படம் பார்ப்பதற்கோ எங்களுக்குப் பணம் தேவைப்பட்டதால் செய்தோம் என்று கூறுகின்றனர் என்கிறார் ஒரு மூத்த காவல் அதிகாரி. (இந்துஸ்தான் டைமஸ் ஆங்கில நாளேட்டின் 11.07.2022 பதிப்பின் சுருக்கம்)

பெற்றோர் மற்றும் பெரியவர்களிடமிருந்து இன்றைய இளைஞர்கள் “பணமே எல்லாம்” என்பதையே காண்பதால், அதையே கற்றுக் கொள்கின்றனர். “அதிகப் பணம் இருந்தால், அதிகமான விடுதலை” என்று நம்புவதற்கே தூண்டப்படுகின்றனர். ஆண் பெண் வேறுபாடின்றி, கணிணி மற்றும் அலை பேசி விளையாட்டுகள், கிழிந்த காற்சட்டை, உடல் முழுவதும் பச்சை குத்துதல், கூர்முனைத் தலை முடி, சொகுசுத் திரையரங்குகளுக்குப் போவது மற்றும் மற்றவர்களைப் பரிகாசம் அல்லது உடற்சேதம் செய்வது போன்றவைகளே இன்றைய இளைஞர்களின் அடையாளமாகி அவைகளை அனுபவிப்பதற்கு எந்தக் கொடுஞ்செயலையும் செய்யத் துணிகிறார்கள். பாவத்தின் அடிமைத்தனத்தில் வாழும் மனுக்குலம் பணத்தையும் பொருளையும் சேமிப்பது, நாம் பெற்றிருப்பவைகளுக்கே தங்களை அடிமையாக்கி விடும் என்று உணர்வதில்லை.

இந்த ஆண்டில் நமது நாடு 76 ஆவது சுதந்திர தினத்தைப் பெருமையுடன் கொண்டாடுகிறது. நாம் அனுபவிக்கிற மக்களாட்சிக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். ஆனால், சமூகம், பொருளியல் மற்றும் அரசியல் ரீதியாக நாம் உண்மை யான விடுதலையைக் கொண்டாடுகிறோமா? செல்வாக்கு நிறைந்தவர்கள், ஆம் அனுபவிக்கிறார்கள்; ஆனால் பெரும்பாலானோர் முழுமையாக அனுபவிப்பதில்லை. தங்கள் குலப் பிறப்பில் பெருமை கொண்டிருந்த யூத மதத் தலைவர்களைப் போல, நாமும் நம்முடைய சமயம், சாதி மற்றும் குலப் பின்னணி மற்றும் சமூக அந்தஸ்து ஆகியவற்றில் அடிமைப்பட்டிருக்கிறோம். இந்திய நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் குறிப்பிட்ட சூழ்நிலையில் மட்டுமே கற்பனையான விடுதலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறான், உண்மை யான விடுதலையுடன் வாழவில்லை. நம்மில் சிலர் கடந்த காலப் பெருமைகளிலும், சிலர் நம்முடைய சாதனைகளிலும், இன்னும் சிலர் நாம் சேர்த்து வைத்திருக்கும் பொருளிலும் திளைத்து அவைகளிலேயே விடுதலை இருப்பதாக யூகித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், அவைகளெல்லாம் உண்மையான விடுதலையைக் கொடுக்கின்றனவா?

கிறிஸ்து கொடுக்கும் உண்மையான விடுதலையைக் குறித்துத் திருமறை பேசுகிறது. இஸ்ரவேலருக்கு, வாக்குப்பண்ணப்பட்ட நிலத்தை ஆண்டவர் கொடுத்த போது, தமது கட்டளைகளுக்குக் கீழ்ப்படியுமாறு ஆண்டவர் தம் மக்களிடம் எதி ர்பார்த்தார் (உபாகமம் 4:1-14). உண்மையான விடுதலை ஆண்டவரை நேசிப்பதிலும் அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதி லுமே இருக்கிறது என்பதைத் திருமறை தெளிவுபடுத்துகிறது. கிறிஸ்துவும் சத்தியத்தை அறிந்து, சத்தி யத்தால் விடுவிக்கப்படும் (யோவான் 8:32) அனுபவத்தையே போதித்திருக்கிறார். சத்தியத்தை அறிதல் என்பது கர்த்தராகிய இயேசுவை அறிவதும் அவருக்கு அன்புடன் கீழ்ப்படிவதுமே. நமக்குப் பாவத்திலிருந்து விடுதலை அளிப்பதற்காக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒரு பெரும் விலையை சிலுவையில் செலுத்தியிருக்கிறார். இந்த உண்மையை அறிந்தும், இவ்வுலகத்தின் பொருட்கள் அதிகமாக நம்மைக் கவர்ந்தி ழுப்பதால், ஆண்டவராகிய கிறிஸ்து விலைக் கிரயம் செலுத்தி நமக்குப் பெற்றுத் தந்த விடுதலையை நாம் பொருட்படுத்துவதேயில்லை.





என் அன்பான இளம் பிள்ளைகளே! கிறிஸ்து கொடுக்கும் விடுதலைக்கு நிகரேதுமில்லை. அந்த விடுதலையை அனுபவிக்க உனக்கு விருப்பமுண்டா? கிறிஸ்துவிடம் வந்தால் அவர் உன்னை விடுவிப்பார். நாம் ஆண்டவருக்குக் கீழ்ப்படிவதற்கு, நம்மைப் பெலப்படுத்துவதற்காக ஆண்டவர் தமது வார்த்தைகளையும், தூய ஆவியானவரையும் கொடுத்திருக்கிறார். நாம் கீழ்ப்படியும் போது நாம் பெறும் விடுதலை, அவ்விடுதலையை என்னில் காண்கிற மற்றவர்களுக்கும் தொற்றிப் பரவுகிறது. இப்பேற்பட்ட விடுதலையை நீங்களும் பெற்று மற்றவர்களுக்கும் கொடுத்திட தேவன் உங்களுக்கு உதவி செய்வாராக.



மகிழ்வான சுதந்திர தின வாழ்த்துகள்!

த. ஆத்ம சொரூபன், செயலர்,
வேதாகம ஊழியத் துறை,
இந்திய வேதாகமச் சங்கம்



# வந்து பார்!

ஒருநாள் ஒரு மனிதன் ஒரு வழக்கமான நாளுக்குப் பின் தன் வேலை முடித்து வீடுதிரும்பிக் கொண்டிருந்தார். நல்ல காற்றைப் பெற கார் ஜன்னல்களை கீழே இறக்கி ஒரு வெற்று சாலை வழியாகச் செல்லும்போது, அவர் ஒரு வேதனையின் அழுக்குரலைக் கேட்டார். ஒரு கால்நடை மருத்துவராக இருந்ததால், வலியில் இருக்கும் நாய்களின் அழுகையை அவர் நன்கு அறிந்திருந்தார். சத்தம் வந்த திசையில் பார்த்து, நாயை விரைவாக அடையாளம் கண்டுகொண்டார். காரை நிறுத்தி, அவர் சாலையைக் கடந்து மெதுவாக நாயை அணுகினார், அதே நேரத்தில் காயமடைந்த விலங்கை அமைதிப்படுத்த முயன்றார். விபத்து நடந்த இடத்தை உற்று நோக்கி என்ன நடந்திருக்கும் என்பதை அவரால் கற்பனை செய்ய முடிந்தது, அந்த நாய் சாலையைக் கடக்கும் முயற்சியில் வேகமாக வந்த கார் மோதி யதில், இரத்தம் கசிய நொண்டிக்கொன்டே தன்னை தானே Driver-ஐ நோக்கி இழுத்துச் சென்று தஞ்சம்புக முயல் வதையும் அவரால் கற்பனையில் காண முடிந்தது. அந்த நாய் பலத்த அடிபட்டு அதன் பின்னங்கால் ஒன்று உடைந்தி ருப்பதை அறிந்தார். ஒரு சில காயங்களேயானால் அவர் அந்த நாய்க்கு முதலுதவி அளித்து விட்டுச் சென்றிருப்பார், ஆனால் இந்த நிலையில் நாயை வீட்டிற்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளிக்க முடிவு செய்தார். அவர் அதை கவனமாக அணுகி, உதவிக்கு தான் இருப்பதாக உறுதிகூறி அதின் நம்பிக்கையைப் பெற்றவுடன், அதன் முகத்தை மூடி, தூக்கிச்சென்று தனது காரிலேற்றி வீட்டிற்கு கொண்டு சென்றார். அதன் காயங்களை சுத்தம் செய்து, சிகிச்சை அளித்து, தகுந்த மருந்துகள் கொடுத்து, காயங்கட்டி, உணவளித்து, பூரணமாக குணமாகும் வரை அடைக்கலம் அளித்து நன்கு கவனித்துக் கொண்டார். அது பூரண சுகமடைந்தவுடன் அம்மருத்துவர் அந்த நாயை சுதந்திரமாக வாழ அனுமதித்தார். நாட்களும் மாதங்களும் உருண்டோடின, மருத்துவர் தனது பிஸியான வாழ்க்கையைத் தொடர்ந்தார்.

ஒருநாள் காலை வேளையில் அதே நாய் தனது வீட்டு வாசலில் நிற்பதைக் கண்டு அம்மருத்துவர் ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைந்தார், இந்த முறை அது தனியாக இல்லை. என்ன நடக்கிறது என்பதை உணர மருத்துவருக்கு சிறிது நேரம் பிடித்தது. மருத்துவர் சிகிச்சை அளித்து குணமடைய உதவிய அந்நாய், காயமடைந்த மற்றொரு நாயை சிகிச்சைக்காக அழைத்து கொண்டு வந்திருந்தது.

**ஒரு கணம் யோசித்துப் பாருங்களேன்.**

இந்த நன்றியுள்ள சிறு நாயின் நீதியான செயல் கிருபையால் பெற்ற இரட்சிப்பின் நற்செய்தியை வைத்து கொண்டு நாம் என்ன செய்கிறோம் என்று நம்மை ஆராய்ந்து பார்க்கச் செய்கிறதல்லவா? முன்பு நாம் உலகத்தால் காயப்பட்டு, நிர்வாணமாக்கப்பட்டு, மறக்கப்பட்டு, பாவத்தில் குற்றுயிராக கிடந்த நம்மை இயேசு என்ற நல்ல சமாரியன் மருத்துவராக வந்து தன் வாகனத்திலேற்றி தன் வீட்டிற்கு தூக்கிச் சென்று (லூக்கா 10:33) காயங்களை சுத்தம் செய்து, சிகிச்சை அளித்து, காயம்கட்டி, நாம் குணமடையும் வரை பொறுமையுடனும், அன்புடனும் நம்மை கவனித்து புதிய மனிதனாக மாற்றினாரே! நாமும் போய் அந்தப்படியே செய்ய வேண்டாமோ? (லூக்கா 10:37) சகாயரின் உதவியால் சுகமடைந்த சீடனாக வாழும் எந்த ஒரு நீதிமானாலும் காயமடைந்து குற்றுயிராய் கிடக்கும் ஒரு பாவியைக் கண்டு விலகிச் செல்ல முடியாது. நீ இயேசு கிறிஸ்துவின் சீடனானால் அவரின் இறுதி கட்டளையை நிறைவேற்ற வேண்டிய சுவிசேஷகனுமல்லவா? (மத்தேயு 28:19)

**சுகப்பட்ட சுயநல வாதியாக மனிதராக வாழ்ந்து முடித்திட போகிறோமா?**

நான் குணமானேன், உன்னையும் குணமாக்குவார், வந்து பார்! என்று சாட்சியளித்து, காயப்பட்ட பாவிகளை அவர் வாசலண்டை கொண்டுசெல்லும் நன்றியுள்ள வாழ்க்கையை வாழுவோம் (யோவான் 1:46). நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்: நீ குணப்பட்டபின்பு உன் சகோதரை ஸ்திரப்படுத்து என்றார். -இயேசு (லூக்கா 22:32)



- Sis. Lilly



# உத்தம சீஷர்கள் எப்பொழுதும் சுவிசேஷ ஊழியத்தில் ஈடுபடுவார்கள்

குருத்தோலை ஞாயிறு நமக்கு தரும் ஒரு அழகான பாடம். கிறிஸ்துவின் சீஷர்களின் வாழ்வில் காணப்பட்ட நல்ல குணநலன்களேயாகும். நாமும் அவருடைய சீஷர்களாக வாழ இந்த தன்மைகள் நமக்கும் வேண்டியதாயிருக்கிறது.

<u>1. கேட்பதற்கான காதுகள் தேவை (வசனம் 1-5)</u>

இயேசு தனது சீஷர்களுக்கு கழுதையையும் அதன் குட்டியையும் கொண்டுவர தேவையான தகவல்களைக் கொடுத்தார். சந்தேகப்படாமல் குறிப்பிட்ட கிராமத்திற்குப் போய், அந்த கிராமத்தாரிடம் பேசும்படி அவர்களிடம் கூறினார். இயேசு எப்பொழுதும் தனது போதனைகளிலும், அவரது வழிகளிலும் மற்றும் கட்டளைகளிலும் தெளிவாக இருந்தார். ஆண்டவரின் சத்தத்தைக் கேட்டு பின்பற்றவும், கவனித்து கீழ்ப்படியவும் நமக்கு காது தேவை. சுவிசேஷத்தை நாம் பறைசாற்றும் பொழுது பேசவேண்டிய வார்த்தைகளை, தேவையான செய்திகளையும் அவரே கொடுப்பார். (லூக்கா 12:12). சுவிசேஷ ஊழியத்தின் வெற்றிக்கு முதல்படி ஆண்டவர் என்ன சொல்லுகிறார் என்ற அவரது சத்தத்தை, வார்த்தைகளை கேட்பது மிகஅவசியம். பின்பு கேட்டவைகளை கீழ்ப்படிந்து நிறைவேற்றும் போது வெற்றி நமதாகும். எனவே ஆண்டவரின் சத்தம் கேட்க உங்கள் காதை ஆயத்தமாக்குங்கள்.

<u>2. செயல்பட நமது பாதங்கள் தேவை (வசனம் 6ன் முன்பகுதி):</u>

இயேசு கூறியபடி சீஷர்கள் சென்று செயல்பட்டார்கள். ஒரு போர்வீரன் தனது தலைவனின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து எந்த கேள்வியும் கேட்காமல் தாமதமின்றி செயல்படுவான். இதே வழியில் அவரது கட்டளையை நிறைவேற்ற நாம் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அவரது ஊழியத்தை செய்ய உங்கள் பாதங்கள் அவருக்குத் தேவைப்படுகிறது. அவருக்காக விரைந்தோட விருப்பமும் கீழ்ப்படிதலும் நம்மை வெற்றிக்கு அழைத்துச் செல்லும்.

<u>3. கீழ்ப்படிய விருப்பம் தேவை: (வசனம் 6ன் பின்பகுதி 7)</u>

சீஷர்கள் கழுதையையும் அதன் குட்டியையும் கொண்டுவந்து அதன் மீது இயேசு அமரும்படி தங்கள் வஸ்திரங்களை அதன் மேல் போட்டார்கள். சீஷர்கள் எந்த கேள்வியும் கேட்காமல் இயேசுவின் வழிகாட்டுதலின்படி கீழ்ப்படிந்து செயல்பட்டார்கள். மேலும் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஊழியத்தை வெற்றிகரமாக செய்தார்கள். எப்பொழுதும் உங்கள் பகுத்தறிவுக்கு வழி கொடாதிருங்கள். தேவனின் அறிவுரைகள் கனி கொடுப்பதாய் இருக்கும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். நமது சிந்தை ஒரு வேளை ஏன்? எப்படி? என்ற கேள்விகளைக் கேட்கலாம். ஆனால் தேவனின் வழி காட்டுதலுக்குக் கீழ்ப்படிந்து செயல்படுங்கள்.

<u>4. பகிர்ந்து கொள்ளும் உடமைகள் (வச 7,8)</u>

வசனம் 8, ஒரு பெரிய கூட்ட மக்கள் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள். மற்றவர்கள் மரத்தின் கிளைகளை வெட்டி வழியிலே பரப்பினார்கள். இயேசுவின் பயணத்திற்கு சீஷர்கள் தங்கள் உடைமைகளையும் தங்கள் உழைப்பையும் கொடுத்தார்கள். இதைப் பின்பற்றி கூட இருந்த மக்கள் கூட்டமும் தங்கள் ஆடைகளை தங்கள் இராஜாவுக்குக் கொடுத்தார்கள். வனாந்தரத்தில் கூடியிருந்த மக்கள் கூட்டத்தைப் பார்த்த இயேசு, அவர்கள் மேல் மனதுருகி அவர்களுக்கு உணவு கொடுக்கும்படி தன் சீஷர்களுக்குக் கட்டளையிட்டார். ஒரு சிறிய பையன் தன்னிடம் உள்ளதைக் கொடுத்தான். (5 அப்பம் 2 மீன்கள்) இயேசு அதை ஆசீர்வதித்து எல்லா மக்களுக்கும் சாப்பிடக் கொடுத்தார். தேவனின் ஊழியத்தை நிறைவேற்றுவதற்காக முதலில் நம்மிடமுள்ளதை பகிர்ந்து கொள்வது முக்கியமானதாகும். பிறகு எல்லாம் ஆசீர்வதிக்கப்பட்டு நமக்கு தேவையானவைகளுக்கும் மேலாக கொடுக்கப்படும்.

<u>5. பறைசாற்றும் நாவுகள் தேவை: (வசனம் 9-11)</u>

முன் நடப்பாரும் பின் நடப்பாருமாகிய திரளான ஜனங்கள் ‘‘தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப் பட்டவர், உன்னதத்தில் ஓசன்னா என்று ஆர்ப்பரித்தார்கள்’’(வசனம் 9). இவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்த தீர்க்கதரிசியாகிய இயேசு என்று மக்கள் பதிலளித்தார்கள். இராஜாதி ராஜாவைக் குறித்து பறைசாற்றும் படியான நமது உதடுகள் தேவனுக்கு தேவைப்படுகிறது. யார் இவர் என்று கேள்வி கேட்ட பொழுது, அவர்கள் இயேசு என்று தைரியமாகக் கூறினார்கள். இவர் பணிவிடை செய்யும் ஆண்டவர். இந்த இராஜா நமக்காக மரிக்கும்படி வந்தார். மேலும் இந்த உலகத்தை நியாயந்தீர்க்கிற நியாயாதிபதியாக மீண்டும் வருவார். இந்தச் செய்தியை அறிவிக்க உங்கள் நாவு தயாராக இருக்க வேண்டும், உங்கள் நாவு ஆண்டவருக்குத் தேவை. இங்கே நாம் கற்றுக்கொண்டதை கடைபிடிக்க மற்றும் பயிற்சி செய்யும்படியாக தேவன் உதவி செய்வாராக.

Rev. E. Rajan



# நமது வாலிபர் பிரிவின் கூடுகைக்காக
## ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறும்
## வாலிபர் கூடுகைக்காக மறவாமல் ஜெபியுங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | - | வாலிபர் கூடுகை | - | பள்ளிக்கரணை |
| 14,15 | - | வாலிபர் தரிசன முகாம் | - | காளையர்கோவில்(ஜெபத்தோட்டம்) |
| 15 | - | வாலிபர் கூடுகை | - | வேலூர் |
| 15 | - | வாலிபர் கூடுகை | - | பண்டார செட்டிவிளை |
| 15 | - | வாலிபர் கூடுகை | - | சுவிஷேசபுரம் (நெல்லை) |
| 17,18 | - | கல்லூரி கூடுகைகள் | - | நாசரேத் |
| 19 | - | வாலிபர் கூடுகை | - | நாசரேத் |
| 21 | - | வாலிபர் கூடுகை | - | ஓமநல்லூர் (நெல்லை) |
| 28 | - | கோரம்பள்ளம் | - | தூத்துக்குடி |
| 31 | - | வாலிபர் கூடுகை | - | மூலச்சல் |
| 31 | - | வேதபாட வகுப்பு | - | வெள்ளவேடு |

## ஜெபக்குறிப்புகள்:

1. கூடுகை நடைபெறும் இடங்களில் தேவ பிரசன்னம் ஆட்கொள்ள ஜெபிப்போம்.

2. திட்டமிட்டபடி கூடுகைகள் தேவனுடைய நாமத்திற்கு மகிமையாய் நடைபெற ஜெபிப்போம்.

3. கூடுகைகளை பொறுப்பெடுத்து நடத்தும் தலைவர்களுக்காக, முன்னேற்றப்பணி ஊழியர்களுக்காக, தேவையான அனைத்து உதவிகளைப் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

4. வாலிபர்கள் திரளாய் கலந்து கொள்ள இரட்சிக்கப்பட, தங்கள் வாழ்வை கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்க, செயல்பட, மினெரிகளாய் புறப்பட்டு செல்ல ஜெபிப்போம்.

5. அனைத்து சபைகளில் இருந்து போதகர்கள், சபை தலைவர்கள், பொறுப்பாளர்கள் முழுமையான ஆதரவு கொடுத்திட ஜெபிப்போம்.

6. செய்தியாளர்கள் மற்றும் கூடுகை நடத்துகிறவர்களை தேவன் எடுத்து பயன்படுத்த ஜெபிப்போம்.

7. வாலிபர் கூடுகையை நடத்துபவர்களுக்காக, தன்னார்வமாக செயல்படும் வாலிப தலைவர்களுக்காக ஜெபிப்போம்.

8. பாடல்/ இசை கருவிகளை வாசிப்பவர்கள் தேவனுடைய வல்லமையால் நிரப்பப்பட ஜெபிப்போம்.

9. வாலிப குழுவினரின் பிராயணங்களுக்காக, சுகத்திற்காக ஜெபிப்போம்.

10. கூடுகையின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

Mr. Daniel Arulmani








இரட்சிப்பின் அனுபவத்தை புதுப்பித்துக் கொண்டேன். கடவுளை விட்டு பின்வாங்கியிருந்தேன். இப்போது கடவுளை கிட்டி சேர்ந்தேன். தோல்வி மட்டுமே என் வாழ்க்கையாக இருக்கிறது. என் வாழ்க்கையை வெற்றியுள்ளதாக்கி கடவுளுக்காக கொடுத்து, ஜெபித்து உதவ தீர்மானித்தேன்.

காமேஷ், திருவள்ளூர்







# மாநில முகாம் வாலிபர் பிரிவு ஒரு சிறப்பு பார்வை

மிஷனெரிகள் வந்து அவங்க கஷ்டப்படுகிறதை சொல்லும் போது இப்படி கூட மக்கள் இந்தியாவில் இருங்காங்கனு அறிந்து கொண்டேன். கர்த்தருக்காக ஏதாவது செய்யனும்னு அறிந்து கொண்டேன்.

குளோரி பிரசன்னா,திருவள்ளூர்

நான் இந்த முகாமிற்கு முதல்முறை வந்தேன் நான் ஒரு மன அழுத்தத்துடன் வந்தேன். என்னுடைய சோர்வு மனஅழுத்தம் மாறக்கூடியதாக கருப்பொருள் மற்றும் தேவசெய்தி மிகவும் தொட்டது. நான் வந்தது தேவசித்தம் என்று அறிந்தேன்.

பவித்ரா வேலூர்

வடமாநிலத்திலுள்ள சூழ்நிலை, மிஷனெரி குறித்த பாரம் வந்தது. இந்த முகாம் மூலம் தேவனின் சித்தத்தை கற்று அதை பின்பற்ற என்ன செய்ய வேண்டும் என்று கற்றுக்கொண்டேன்.

சூர்யா, வெள்ளவேடு

முதல் முறையாக இந்த முகாமிற்கு வந்தேன். மிஷனெரிகள் பற்றியும், அவர்கள் மேற்கொள்ளுகிற சவால்கள் பற்றியும், அங்குள்ள மக்கள் பற்றியும் நான் நேரில் கண்டு அறிந்திருக்கிறேன். அவர்களுக்காக ஜெபிப்பேன்.

அலீஸ், திருவள்ளூர் மாவட்டம்

இந்த முகாமிற்கு 2 முறை வந்துள்ளேன். ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகவும் அவசியமுள்ள வார்த்தைகள் இங்கு கிடைக்கின்றன. அது எனக்கு தேவையாக இருந்தது. வருடம்தோறும் வருவேன்.

சௌமியா, திருவண்ணாமலை.

என் ஜெப வாழ்க்கையில் உறுதியாக இருக்க வேண்டும் என்று அறிந்து கொண்டேன்.

சர்மிளா, திருவண்ணாமலை.

பணித்தள பகிர்வுகள் மூலமாக ஒவ்வொரு மாநிலத்தின் நிலைமை குறித்து மிக தெளிவாக கற்றுக்கொண்டேன். ஒவ்வொரு மாநிலத்திற்காக அனுதினமும் ஜெபிப்பேன். இயேசுவை அறியாத வடமாநிலத்தில் பணிசெய்யும் மிஷனெரி குடும்பத்திற்காக அனுதினமும் ஜெபிப்பேன்.

கிறிஸ்டோபர் நவீன், சேலம்

இங்கு வந்தது என் வாழ்க்கைக்கும், என் வாழ்நாளுக்கும் உன்னத திட்டத்தை நோக்கி எப்படி செல்ல வேண்டும் என்று உணர்த்தியது, பிரயோஜனமாக இருந்தது.

வினோதினி, அம்பத்தூர்

மிஷனெரியாக ஆசிரிய பணி செய்ய அர்ப்பணித்துக் கொண்டேன். தடைகள் மாற, விரைவில் போக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

வெரோனிக்கா, தர்மபுரி

என் நண்பர்களுக்கு கடவுளை பற்றி சொல்ல வேண்டும் என்பதை கற்றுக்கொண்டேன்.

நிஷா, கிருஷ்ணகிரி

வேலைக்கு போவதா, ஊழியம் செய்வதா என்று குழப்பமாக இருந்தது. ஆனால் ஆண்டவரை அறியாமல் அநேக ஜாதியான மக்கள் வாழ்கின்றனர் என்ற தாக்கத்தை, ஒரு பாரத்தை பெற்றுக்கொண்டேன்.

சௌந்தரியா, ராமேஷ்வரம்

சுசி பிரபாகரன் ஐயா அவர்களின் செய்தியின் வழியாக நான் மாற்றம் பெற்றேன். நல்ல நண்பர்களுடன் சேரவேண்டும் என்பதை அறிந்து கொண்டேன். கெட்ட நண்பர்களுடன் சேர்ந்து நிறைய பாவங்கள் செய்தேன். அது மட்டுமல்லாமல் குடி மற்றும் புகையிலை பழக்கத்தில் ஈடுபட்டு கொண்டிருந்தேன். இனிமேல் அதிலிருந்து விடுபட முயற்சி செய்ய விரும்புகிறேன். எனக்காக ஜெபியுங்கள்.

பொன்ராஜ், ராமநாதபுரம்

நவநீதர் அங்கிள் பேசிய வார்த்தை பிரயோஜனமாக இருந்தது. தீயப்பழக்கங்களிலிருந்து விடுபட உதவியாக இருந்தது. தேவனுக்கு மகிமை.

தினகரன் இராமநாதபுரம்

வடமாநில கலாச்சாரங்களை பற்றி அறிந்து கொண்டேன். முதன் முறையாக தேசத்திற்காக அழுது ஜெபித்தேன்.

ஜூடோ ஜோயல்சிங், மேட்டுப்பாளையம்.

வேதாகம தேர்வு ரொம்ப உபயோகமாக, யோசிக்க கூடியதாக இருந்து. வேதாகம நுணுக்கங்களை புரிந்து கொள்ள மற்றும் வேதாகமத்தை ஆழமாக படிக்க, உணர செய்தது.

சாமுவேல் டென்னிஸ், தென்காசி

உபவாச ஜெபத்தில் என் ஜெப வாழ்க்கையை சீர்படுத்த உதவியாக இருந்தது. ஆத்துமபாரத்தை என் உள்ளத்தில் பெற்றுகொண்டேன். பாடல்கள் மிக அர்த்தம் உள்ளதாக இருந்தது.

கெர்சி மிஸ்பா, தூத்துக்குடி

தேசத்தின் மேல் ஜெபிக்கும் பாரத்தை பெற்றுக்கொண்டேன். எனக்குள் இருந்த தேவையில்லா குழப்பங்கள் நீங்கியது. தானியேலைப் போல வாழ கற்றுக்கொண்டேன்.

ஜெமிமா, தென்காசி.

மிஷனெரிகள் தங்களின் விசுவாசிகளோடு பகிர்ந்து கொண்ட செய்திகள் என்னையும் ஒரு மிஷனெரியாக அறியாத மக்களுக்காக அனுதினமும் ஜெபிக்க தூண்டியது.

ரம்யா, தென்காசி.

I came through a comeback both in my spiritual and wordy life. I eagerly waited for a offline meeting to get refreshed in my spiritual life.

**Eunice Joy, Dharmapuri**

This camp gave me a new experience to.

**Santhiya Reyason, Rameshwaram.**

I will give my best support and prayers. All the missionaries who have shared during the fasting day really touched me and changed me personally. I will pray that someone from my area should go for a fulltime ministry in FMPB.

**Christopher, Erode.**



# சென்னை மாநகரிலிருந்து குஜராத் மலைத்தொடருக்கு பணித்தள விஜயம்







கர்த்தருடைய பெரிதான கிருபையினால் கடந்த ஏப்ரல் மாதம் 12ஆம் தேதி அன்று 40 பேர் அடங்கிய வாலிபர் குழு சென்னையிலிருந்து மாலை 7.00 மணி அளவில் புறப்பட்டு மும்பை சென்றடைந்தோம். பின்னர் மும்பையிலிருந்து ரயில் மூலமாக 13ஆம் தேதி அதிகாலை குஜராத் மாநிலம் சென்றடைந்தோம். அங்கிருந்து இரண்டு குழுக்களாக பிரிந்து ஒரு குழு கர்காம் விடுதி, தராம்பூர் பணித்தளம், சில்வாசா பணித்தளம், ஆகியவற்றை சந்திக்கவும், மற்றொரு குழு தனக்ளா பணித்தளம், ஜடோலி கிராமம் ஆகியவற்றை சந்திக்கவும் கர்த்தர் கிருபை செய்தார். இரண்டாம் நாள் 14 ஆம் தேதி முதல் குழு ராந்தா விடுதி, மோட்டோ போந்தோ பணித்தளம், பிப்பிள்வாடா ஆங்கில வழி பாடசாலை ஆகியவற்றை பார்வையிடவும், அங்குள்ள மாணவர்களின் சாட்சிகளை கேட்கவும் கர்த்தர் கிருபை பாராட்டினார். மற்றொரு குழு கவான்ட் பணித்தளத்தில், விந்திய மலைத்தொடரில் உள்ள காக்கோடு ஜில்லா என்னும் கிராமத்தில் வசிக்கும் பீல் இன ஆதிவாசி மக்களை சந்தித்து அவர்களது சாட்சிகளை கேட்கவும் கிருபை பாராட்டினார்.

மேலும் 3ஆம் நாள் 15ஆம் தேதி இரண்டு குழுக்களும் இணைந்து நசுராடி பணித்தளத்தில் உள்ள ரேலியம்பா என்னும் கிராமத்தில் உள்ள ஆலயத்தில் நடைபெற்ற புனித வெள்ளி ஆராதனையில் அந்த கிராமத்து மக்களுடன் இணைந்து தேவனை ஆராதித்தோம். பின்னர் மாலை 4 மணி அளவில் அங்கிருந்து புறப்பட்டு நேத்ரங்க் வந்து சேர்ந்தோம். பின்னர் அங்கிருந்து ரயில் மூலம் 16ஆம் தேதி அதிகாலை மும்பை சென்றோம்.

பணித்தளங்களில் மூன்று நாட்களும் நமது மிஷனரிகள் மறைத்திரு ஜோசப் துரைராஜ், திரு. யுவனேஷ், திரு ஹென்றி, திரு. விக்னேஷ் அவர்கள் குடும்பமாக எங்களுடன் சேர்ந்து பணித்தள காரியங்களை எங்களுடன் பகிர்ந்து கொண்டனர்.


மும்பையில் தமிழர்கள் அதிகம் வசிக்கும் தாராவி பகுதிக்கு சென்று அங்குள்ள CNI திருச்சபையை பார்வையிடவும் தேவனுக்கு நன்றி செலுத்தவும் கர்த்தர் கிருபை செய்தார். மறுநாள் 17 ஆம் தேதி பொய்ச்சார் பகுதியில் உள்ள CNI தமிழ் திருச்சபையில் உயிர்த்தெழுதல் ஆராதனையில் பங்குபெறவும், அங்குள்ள வாலிபர்கள் மத்தியில் ஊழியம் செய்யவும் கர்த்தர் கிருபை செய்தார். பின்னர் மாலை 7 மணி அளவில் மும்பையில் இருந்து புறப்பட்டு சென்னை வந்து சேர்ந்தோம். பணித்தளத்தில் எங்களை மிகவும் பாதித்த ஒரு சில காரியங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள விருப்பப்படுகிறோம்.

1. ராந்தா விடுதியில் பயிலும் நமது விசுவாச மாணவர்கள் ஆங்கிலத்தில் உரையாடுவதையும், பாடல்களை பாடுவதையும், வசனங்களை ஒப்புவிப்பதையும் பார்க்கும் போது, நமது ஜெபங்களினாலும், காணிக்கைகளாலும் ஒரு புது சமுதாயமே தேவனுடைய ராஜ்ஜியத்தில் கட்டி எழுப்பப்படுவதை எண்ணி தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.
2. கோபா என்கிற கிராமத்தில் வசிக்கும் மக்கள் இணைந்து அவர்களுக்கான ஆலயத்தை அவர்களே கட்ட எடுக்கும் முயற்சியை எண்ணி கர்த்தர் மேல் அவர்கள் வைத்துள்ள வைராக்கியத்தை எண்ணி தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.
3. காக்கோடு ஜில்லா கிராமத்திற்கு செல்லும் போது நமது மினரிகள் அழிந்து போகின்ற ஆத்துமாக்களுக்காக காடுகளையும், மலைகளையும் ஆறுகளையும் தாண்டி செல்லும் அனுபவத்தை நேரடியாக உணர முடிந்தது. குறிப்பாக சொல்லும் போது இந்த பணித்தளத்துக்கு செல்ல நர்மதா நதியில் 2 மணி நேரம் படகில் பிரயாணம் செய்து பின்னர் 1.5 மணி நேரம் 600 அடி உயரமுள்ள செங்குத்தான மலையின் மீது பாதையே இல்லாத இடம் வழியாக சென்று அந்த கிராமத்தை அடைந்தோம். இந்த அனுபவங்களை பார்க்கும் போது நாம் இன்னும் நமது மிஷனரிகளுக்காக அதிகம் ஜெபிக்க வேண்டும் என்கிற பாரத்தையும் இன்னும் அதிகமான வாலிபர்கள் ஊழியத்திற்கு வரவேண்டும் என்கிற பாரத்தையும் கர்த்தர் எங்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் தந்தார்.

இதை வாசிக்கும் அன்பு தம்பி, தங்கையே அனுதினமும் காடு, மலை கடந்து சென்று கர்த்தர் அன்பை அறிவிக்கும் பொறுப்பில் இருக்கும் நமது ஊழியருக்காக அனுதினமும் ஜெபிப்பது நம் கடமையல்லவா? ஜெபிப்போம்! கொடுப்போம்! விரைந்து செயல்படுவோம்.

- Bro. Immanuel, Saitapet




FMPB
Youth wing
வாலிபர் தரிசன
கூடுகை
இடம் ஜெபத்தோட்டம்,
காளையார்கோவில்
செய்தியாளர்கள்
சகோ. இம்மானுவேல் ரஞ்சித்சிங்
திருமதி. வசந்தி இம்மானுவேல்
சகோ. ஐசக் கமலேஷ்
சகோ. வினு (மத்திய பிரதேசம்)
ஆகஸ்ட்
14 மாலை 4 மணி முதல்
15 மதியம் 2 மணி வரை
இருபாலருக்கும் தனித்தனியாக தங்கும் வசதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது
கருப்பொருள்: உன்னத திட்டத்தை நோக்கி
எரேமியா 29:11
பதிவு கட்டணம்
ரூ.50/-
இளம் தலைமுறையை உன்னத திட்டத்தை நோக்கி பயணிக்க
எழும்பி வா
என அன்புடன் அழைக்கிறோம்.
தொடர்புக்கு:
நண்பர் ஊழியம் ஜெபக்குழு
8140226634,
8903284002,
9894458018,
7010297996,
9750259135